# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி 1969



நிலவெனும் வதனம் நெற்றி
நெடுமழை அனைய கூந்தல்
மலரெனும் கண்கள் கைகள்
மரியம்மை அழகின் தெய்வம்

—கவிஞர் கண்ணதாசன்—

மே
2002

12/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

மே - 2002

மலர் 34 ❄ இதழ் 03

ஆசிரியர்
J.A.G. இரட்ணகுமார்

இணை ஆசிரியர்
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்
மெற்றில்டா இராஜேந்திரம்

வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு/மட். மறை மாவட்டம்

முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்.
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS
CENTRE
P. O. BOX - 44
BATTICALOA. 30000
Tel: 065 - 22723

விலை - 12/=
ஆண்டுச்சந்தா : 160/=
(தபாற்செலவு உட்பட)

## உள்ளே

| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு | 1 |
| சமுதாயச் சூழலில் ஆன்மீகம் | 2 |
| அன்பியம் பயிற்சிப்பாசறை | 3 |
| இலக்கிய மஞ்சரி | 4 |
| நேர்காணல் | 6 |
| இரவில் உதித்த யேசு சூரியன் | 9 |
| பாலையூற்றுக் கத்தோலிக்க ......... | 11 |
| சிறுகதை | 13 |
| மாணவர் பக்கம் | 15 |
| பொருளாதார சுரண்டலும் ....... | 18 |
| ஒரு குறுக்கு வெட்டு | 20 |
| விவிலியம் கற்போம் | 23 |
| அறிவை வளர்ப்போம் | 24 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு

அமைதியின்மையில் அமைதியின் அறிகுறிகள் தோன்றியதற்குக் காரணம் அன்னையின் (மருதமடு மாதா)மறை மாவட்டங்களுக்கான பவனியாகும்.அன்னையின் திருச்சுரூபம் சென்ற இடமெல்லாம் பக்தியும், பரவசமும் நிறைந்து காணப்பட்டன.

அமைதிக்காகத் தொடர் பிரார்த்தனைகள் நடந்தேறின. சிங்கள மக்களும், தமிழ் மக்களும் எவ்வித பாகுபாடுமின்றி இப்பிரார்த்தனைகளில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. அவ்வேளையிலேயே ஒற்றுமையின் ஒளிக்கதிர்களும்அமைதியின் அறிகுறிகளும் தோன்றின.

அரசியல் சாணக்கியங்களாலோஅல்லது ஆயுத பலத்தினாலோ அடையமுடியாத சமாதானம் அன்னையின் பவனியில் ஏற்பட்ட பரிந்துரையால் சமாதானத்துக்கான கதவுகள் திறக்கப்பட்டன.

இச்சமாதானப் பாதையில் வழி நடப்போர், புரிந்துணர்வுடன் செயற்பட முன்வந்ததையிட்டு இலங்கை மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள். இரு சாராருமே தெய்வ பயத்தோடும், இதய சுத்தியோடும் துன்பப்பட்ட மக்களின் துயர் துடைக்க வேண்டுமென்ற உணர்வோடு செயல்பட கடமைப் பட்டுள்ளார்களென்பதை மறக்கக் கூடாது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னால் ஆங்காங்கே சிறுசிறு தடங்கல்கள் ஏற்பட்டாலும் புரிந்துணர்வில் கைச்சாத்திட்ட இரு தலைவர்களும் பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஓர் இலக்கை நோக்கி நடைபோடுவதை உணர முடிகிறது. இச் சமாதானப் பயணம் வெற்றியில் முடியவேண்டுமென்பதே சகல மக்களின் பிரார்த்தனையாகும்.

அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட இலங்கை நாட்டில் அன்னையின் பரிந்துரையால் சமாதான முயற்சிகள் முழுமை பெற வைகாசி வணக்க மாதத்தில் ஜெபிக்கத் தூண்டுகிறோம்.

ஆசிரியர்




**இறைவாக்கு**



**அருள்மிகப் பெற்றவரே வாழ்க!**
**பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்**

- லூக்கா 1/28,42



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாயச் சூழலில் ஆன்மீகம்

இன்றைய உலகச் சூழலை உன்னிப்பாகக் கவனித்துவரும் திருத்தந்தை இரண்டாம் ஜோன் பால் தமது எழுத்திலும் பேச்சிலும் பலமுறை இன்றைய சமுதாயத்தை 'அழிவுக்கலாசாரம்' ஆக்கிரமித்து வருகிற தெனக் கூறுகிறார். மனித நேயம் மங்கி, சமூக நீதி சரிந்து மக்கள் மத்தியிலே பகைமையும் பூசலும் வளர்ந்து வருகின்றன. உலக மய மாக்குதல், தாராளமயமாக்குதல் இவற்றின் தாக்கத்தால் வரையறை மீறிய இலாபநோக்கும் மற்றவர்களை அடிமைப்படுத்தி ஆக்கிரமிக்க வேண்டும் என்ற ஆதிக்க வெறியும் நமது சமுதாயத்தைப் பிளவுபடுத்தி மனித வாழ்வை நரகமாக்கி வருகின்றன எனவும் ஆதங்கத் தோடு கூறுகின்றார்.

இந்நிலை மாறிச் சமுதாயத்தில் நீதியும் மனித நேயமும் மனித மாண்பும் வளர நாம் உழைக்க வேண்டும். அதற்கான ஆன்மீகம், புதுயுகப் பேராளி இயேசுவின் ஆன்மீகத்தின் மறுபதிப்பாக மலர வேண்டும்.

விழிப்புணர்வும் விடுதலை வேட்கையும் செயல்திறனும் சமுதாய ஈடுபாடும் இன்றையக் கிறீஸ்தவ ஆன்மீகத்தின் இன்றியமையாத கூறுகளாக விளங்கவேண்டும். அழிவுச் சக்திகள் எங்கெல்லாம் தலைதூக்கி நிற்கின்றனவோ அங்கெல்லாம் அவற்றை இனங்கண்டு அழித்து மனிதம் மலர்ந்திட உதவும் உயிர்ப்புச் சக்திகளை வளர்த்திட நமது ஆன்மீகம் உறுதுணையாக இருக்கவேண்டும்.

## மரபு ஆன்மீகம்

கிறீஸ்தவ சமயம் மனித நேயம், பொதுவுடமை, மற்றும் சமதர்மம் ஆகிய மதிப்பீடுகளின் அடிப்படையில் எழுப்பப்பட்டிருந்தாலும் நாளடைவில் அந்தந்தச் சமுதாயச் சூழலுக்கேற்ப ஏகாதிபத்தியக் கொள்கையையும் முதலாளித்துவக் கோட்பாடுகளையும் தம் இறையியலிலும் ஆன்மீகத்திலும் ஏற்றுக் கொண்டது.

முதலீடு, இலாபம், போட்டி போன்ற முதலாளித்துவச் செயல் முறைகள் ஆன்மீகத்தில் புகுத்தப் பட்டும் பக்தி முயற்சிகள், செபவழி பாடுகள் இவ்வுலகிலே புண்ணியங்களை சம்பாதித்து விண்ணகத்திலே உயர்ந்த இடத்தைப் பெறும் கருவியாக மாற்றப்பட்டன. திருச்சபை என்ற சகோதரத்துவ சமுதாயக் கண்ணோட்டம் மறைந்து தனிப்பட்ட ஆளின் ஆன்ம மீட்புக்காகவே திருச்சபை பயன் படுத்தப்பட்டு வந்தது.

திருப்பணிகள் பக்தர்களாக மாற்றப் பட்டுப் பக்தி முயற்சிகளால் மழுங்கடிக்கப்படுகின்றனர்.

இன்றையத் திருச்சபைச் சூழல் பொதுவாக இத்தகைய பழமை ஆன்மீகத்தை வளர்க்க உதவுகிறதே அன்றி சமத்துவ, சகோதரத்துவ மனநிலைகளை, நீதிச் செயற்பாடுகளை உருவாக்கவில்லை, புதிய ஆன்மீகம் வளர நம் உணர்வுகள், பக்தி முயற்சிகள் மற்றும் செயற்பாடுகளைச் சீர்செய்ய வேண்டும்.

(தோழன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பியம் பயிற்சிப் பாசறை

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டப் பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி A. தேவதாசன் அடிகளாரால் ஒழுங்குசெய்யப்பட்ட மறைமாவட்ட அன்பியப் பயிற்சிப் பாசறையானது 12.02.2002 அன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிமுதல் 14.02 2002 அன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7மணிவரை மட்டக்களப்பு அருள் ஒளி இல்லத்தில் நடைபெற்றது. 37 பங்குகட்கு அழைப்புகள் விடுக்கப் பட்டன. இருவர் விகிதம் அனுப்பப்படல் வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே 74 பேருக்கான பயிற்சிப் பாசறை இது. ஆனால் 21 பேரே கலந்துகொண்டனரென்பது கவலைக்குரியது. எமது மறைமாவட்டத் திருச்சபை தூங்குகிறதா என எண்ணத் தோன்றுகிறது. இயக்குநர் தந்தையுடன் திரு. S. அமலதாஸ், செல்வி மற்றில்டா இராஜேந்திரம் திருமதி M.தேன்மொழி, அருட் சகோதரிகள் சலோமி, புஸ்ப ராணி, லொரன்டினாச திரு. J பத்திநாதன் திரு S. பிரபாகரன் திரு J. மனோகித ராஜ் ஆகியோர் உரை களையும் பயிற்சிகளையும் வழங்கினர். பயிற்சியாளர் அனைவரும் திருப்தியுடன் சென்றனர். தாம் பெற்ற இந்த அனுபவத்தைப் பங்குத் தளங்களில் நடை முறைப்படுத்துவோம் என்ற தீர்மானத்துடன் அவர்கள் சென்றது மகிழ்ச்சியைத் தந்தது. இவர்களுக்கு இவ் வருடத்திலேயே இன்னும் 2 தடவைகள் மேலதிகப் பயிற்சிநெறிக் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பங்குகளில் அன்பியம் வளரவேண்டுமானால் அங்கிருந்து ஊக்கு விப்பாளர் உருவாக்கப்பட்டுப் பயிற்சி பெறவேண்டும் என்பதை அனைவரும் உணர்வது நன்மை பயக்கும்.

செல்வி. மற்றில்டா இராஜேந்திரம்

## வாழ்வைப் பாதுகாக்க உழைப்போம்

உயிர்த்த கிறிஸ்து வழங்கிய அமைதி புனித பூமியின் மோதல்களிடையே ஆழமான எதிரொலியைக் கொண்டிருக்க வேண்டிய தேவையை மனதில் கொண்டே இந்நாளில் அமைதிக்கான தனிப்பட்ட செபத்துக்கு அழைப்பு விடுத்தார் திருத்தந்தை. ஆயுதங்களின் ஆக்கிரமிப்பு அதிகரித்துவரும் இன்றைய உலகில் அமைதியை நோக்கி மனிதனின் மனங்களையும், இதயங்களையும் இறைவனே திருப்பமுடியும் என்ற அவர், இறைவனைத் துணைக்கொண்டு பகைமை உணர்வுகளிலிருந்து விடுதலை பெறுவோம் என்ற அழைப்பையும் முன்வைத்தார். இயேசுவின் பிறப்பு பசிலிக்காவைச் சுற்றிய மோதல்களால் துன்பங்களை அனுபவித்துவரும் பிரான்சிஸ்கன் சபையினர், கிரேக்க ஆர்த்தடாக்ஸ் மற்றும் ஆர்த்தடாக்ஸ் ஆர்மீனியன் இயேசு சபையினருக்கான செபத்துக்கும் உறுதி கூறினார் திருத்தந்தை. வாழ்வைப் பாதுகாப்பதும், ஊக்குவிப்பதும் தனிப்பட்ட குழுவிற்கு மட்டுமுள்ள கடமையும் உரிமையுமல்ல, மாறாக அனைத்து சமுதாய த்துக்கும் உள்ள பொறுப்புணர்வு என்பதால் இவ்வர்ப் பணத்தில் கடவுள் நம்பிக்கை உடையோரும் நம்பிக்கை அற்றோரும் என அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம் என திருத்தந்தை மேலும் உரைத்தார்.

## குருவானவர் விடுதலை

பிலிப்பைன்ஸ் நாட்டின் இஸ்லாமியத் தீவிர வாதிகளால் கடந்த ஆறுமாதங்களாகக் கடத்தி வைக்கப்பட்டிருந்த இத்தாலியக் குரு ஒருவர் கடந்த வாரம் விடுவிக்கப்பட்டார். அக்டோபர் மாதம் 17ம் திகதி தென் பிலிப்பைன்ஸ் பகுதியில் கடத்திச் செல்லப்பட்ட இக்குரு விடுவிக்கப்பட்டதும் பிலிப்பைன்ஸ் அரசுத் தலைவரைச் சந்தித்து உரையாடினார். தன்னுடைய விடுதலை என்பது ஒரு புதுமைபோல் தோன்றுவதாகவும், இறைவனுக்கும் பிலிப்பைன்ஸ் அரசுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார், விடுதலை அடைந்த இத் தாலியக் குரு. சில இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்கள் வெளிநாட்டவர்களையும், குருக்களையும் பணயக்கை திகளாகக் கடத்திச் சென்று பணம் பறிப்பது வழக்கமாக இருக்கின்ற போதிலும் கடந்த இரண்டு வருடங்களாக இவை அதிகரித்துள்ளது. இவர்கள் குருவின் விடுதலை க்காகக் கேட்டிருந்த இலட்சம் டொலர் பணத் தொகை வழங்கப்படவில்லை என அரசு அறிவித்துள்ளது!

### கடவுளே காரணம்

மூவர் ஓரே குளத்தில் தூண்டிலிட்டனர் மூவரும் மூன்று மீன்களைப் பிடித்தனர் பிடித்த மூவரும் கடவுளுக்கு நன்றிகூற மறந்து கடவுளுக்கு ஏனிந்த ஏற்றத்தாழ்வு, நாம் மூவரும் சிறிதும் பெரிதுமான மீன்களைப் பிடிக்கக் கடவுள் தானே காரணம் என்றனராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியமும் படைப்பாளியும்

இலக்கியங்களைப் படைக்கும் படைப்பாளிகளைப் பற்றியும், அவர்களின் பின் புலங்கள், வாழ்க்கைப்பற்றியும் அறிய ஆவலாய் இருப்போர் மிகவும் குறைவு. இலக்கிய ஆக்கங்கள் பற்றி விமர்சிக்கும், ஆராயும் இலக்கிய ஆர்வலர்கள், படைப்பாளிகளின் வாழ்க்கைப் புலம் பற்றியும் அறிந்திருப்பது ஓரளவுக்கு நன்மை பயக்கக் கூடியதாக இருக்கும்.

நவீன படைப்பாளிகளின் வாழ்க்கையின் பதிவுகள், பாதிப்புகள், சுவடுகள் என்பன அவர்களின் படைப்புகளின் தளவாடிகள் போன்று பிரதிபலிக்கின்றன. எனவே இலக்கியப்படைப்புகளில், படைப்பாளிகளின் தனித்தன்மை காணப்படுகின்றது. ஆகவே படைப்பாளியைப் பற்றி அறிந்திருப்பது படைப்புகளை ஆராய்வதற்கு உதவும்.

எனினும் படைப்பாளியின் வாழ்க்கை வரலாற்றை அறிவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளன. புகழ்பெற்ற இலக்கிய வாதிகளின் வாழ்க்கை வரலா றுகளையாவது இலக்கிய வடிவில் கொண்டுவர சம்பந்தப்பட்டவர்கள் ஆவனசெய்ய வேண்டும். இது நூல் இலக்கியவடிவில் இருக்கலாம் அல்லது ஒளி, ஒலி வடிவஇலக்கியங்களாக இருக்கலாம். எனினும் இரண்டாவது முயற்சி பெரும் பொருட் செலவு மிக்கதாகவே இருக்கும்.

அண்மையில் சித்திரைப்புத்தாண்டு தினத்தன்று தொலைக்காட்சியின் ஓர் அலைவரிசையில் 'பாரதி' என்னும் திரைப்படம் ஒளிபரப்பானது. நான்கு விருதுகளை வென்ற இப்படம் உண்மையிலேயே மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை அப்படியே அப்படம் விளக்கியது. இத்திரைப்படம் விவரணச்சித்திரமாக அமையாது சாதாரணமான திரை ஓவியமாக் அமைக்கப் பட்டிருப்பது மிகவும் ஈடுபாட்டை ஏற்படுத்தியது. ஒரு மகாகவியின் வாழ்க்கையில் இவ்வளவு சோகங்களா...? இவ்வளவு துணிச்சல்களா...? இவ்வளவு போராட்டங்களா ...?

பாத்திரங்களின் தெரிவுகள் பொருத்தமாக இருந்தது. பாரதியாரின் கம்பீரமான தோற்றம், நடை, ஒளிவீசும் கண்கள் என்பன பொருந்தி இருந்தன. எழில் கொஞ்சும் இடங்களில் படப்பிடிப்புகள் இடம் பெற்றிருந்தன.

எனினும் வேதனையான ஒரு செய்தி: அன்று 'பாரதி' திரைப்படத்தைப்பார்த்தவர்கள் மிகவும் குறைவு. ஏனெனில் சமகாலத்தில் இன்னோர் அலைவரிசையில் வேறு சிறப்பு நிகழ்ச்சிகளும் (ஜனரஞ்சக) தமிழ்த்திரைப் படம் ஒன்று ஒளிப்பரப்பானது. நிறையப் பேரை விசாரித்ததில் 'பாரதி' தோற்றுப்போனார்.

## இலக்கிய மஞ்சரி

– ஆழியோன் –

மே மாதம் முதலாம் நாள் உலகத்தொழிலாளர் தினம். இத்தினமானது தொழிலாளர்களாலும், தொழிற் சங்கங்களாலும் கொண்டாடப்பட்ட மரபுமுறை மாறிப்போய் அரசியற்கட்சிகளால் கொண்டாடப்படும் ஒரு நிலைமை உண்டாகிவிட்டது. நூற்றாண்டுகட்கு முன்னர் அடிமைப்பட்ட தொழிலாளர்கள் தங்கள் உரிமைப் போராட்டங்களை படிப்படியாக ஆரம்பித்தனர். அவர்களின் போராட்ட முறைகள், எழுத்துருவில்தான் அமைந்திருந்தன. பெரும்பாலும் 'மகஜர்' வடிவில்தான் இருந்தன. இறுதியில் தான் இரத்தம் சிந்தியது.

எனவே தொழிலாளர்களின் உரிமை போராட்டத்திற்கும் எழுத்திலக்கியங்கள்தான் உதவின என்பது கண்கூடு.

இலங்கையில் சமாதானத்திற்கான ஒளிக்கீற்று தென்பட ஆரம்பித்துள்ளது. இது மூன்றாம் பிறையாக இல்லாமல் முழுநிலவாக மாறவேண்டும். இதற்கு எழுத்துலகு உதவவேண்டும்; நடுநிலைமை பேணவேண்டும்.

எனினும் சில பேரினவாத நாளேடுகள் நஞ்சைக் கக்குவதுதான் வேதனை. இந்நிலைமை மாறும் வரை நிரந்தர சமாதானம் பெறுவது பெரும்பாடாய்த்தான் இருக்கும். ◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டன் மட்டக்களப்பு மாவட்டச் சிறப்பிதழ்

ஜூலை – ஆகஸ்ட் மாதங்கள் இணைந்து மட்டக்களப்பு மாவட்டச் சிறப்பிதழாக வெளிவருகிறது. சிறப்பிதழைச் சிறப்பிக்க எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்களை எதிர்பார்கிறோம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமயங்கள், கலாசாரம், பண்பாடு, பொருளாதாரம், அரசியல், சமூகவரலாறு போன்ற இன்னோரன்ன விடயங்களைக் கருவாகக் கொண்ட கட்டுரைகள், மற்றும் சிறுகதைகள், கவிதைகள், தகவல் குறிப்புகள் போன்ற விடயங்களை எழுத்தாளரிடமிருந்து எதிர்பார்க்கிறோம். வந்து சேர வேண்டிய இறுதிநாள் ஜூன் 10



தொண்டன் சிறப்பிதழ்
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ. எண். 44
மட்டக்களப்பு.

## திருத்தந்தையின் உடல் நிலை சரியில்லை

திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பருக்கு அண்மைக் காலமாக உடல் நிலை சரியில்லை, அவர் மிகவும் துன்புறுகிறார் என்றும் எந்தப்பணிகளையும் அவர் செய்யவில்லை, அவருக்கு நெருக்கமானவர்கள்தான் திருச்சபையை ஆளுகின்றார்கள் என்றும் பத்திரிகையாளரிடம் சமீபகாலமாக நிலவி வந்த கருத்துக்களை கர்தினால் எட்வேட் கஸ்டே மறுத்துள்ளார். திருத்தந்தைக்கு உடல் நலமில்லை தான் ஆனால் அவரது மனமும் இதயமும் மிகவும் உறுதியாகவே இருக்கிறது என்று தெரிவித்துள்ளார். ஏப்ரல் 16 செவ்வாய்க்கிழமை நைஜீரியன் ஆயர்களைச் சந்தித்துப் பேசினார். புதன் மறை போதகத்தை நிகழ்த்தினார் என்று கூறிய கர்தினால், திருத்தந்தை மிக உடல் நலம் குன்றி இருக்கிறார் என்பதை தான் மறுக்கவில்லை என்றும் ஆனால் அவர் உள்ளத்தில் உறுதியுடன் இருக்கின்றார் என்றும் கூறினார்.

## உலகத் தொடர்பு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட மாணவரிடையே தொண்டன் – சஞ்சிகை நடாத்தும் கட்டுரைப்போட்டி

### தலைப்பு – 'கல்வித்துறையில் தொடர்பு சாதனங்கள்'

* வயது வித்தியாசமின்றி எல்லா மாணவர்களும் பங்கு கொள்ளலாம்
* மாணவரின் ஆக்கம் என்பதை பாடசாலை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்
* முழுத்தாளில் நான்கு பக்கங்களுக்கு கட்டுரை அமைதல் வேண்டும்
* தெரிவு செய்யப்படும் மூன்று கட்டுரைகளுக்கு பரிசும் சான்றிதழும் வழங்கப்படுவதோடு முதற்பரிசு பெறும் கட்டுரை தொண்டன் சிறப்பிதழில் பிரசுரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நேர்காணல்

## நற்செய்திப் பணியாளர்

## சகோ. D. ஜெயானந்

### அவர்களுடன்

தென்னிந்தியாவின் பெங்களூரில் இயங்கும் கத்தோலிக்க நற்செய்தி அறிவிப்பு நிலையத்தின் நிறுவனரான சகோ. D. ஜெயானந் அவர்கள் கடந்த பெப்ரவரி மாத நடுப்பகுதியில் இலங்கைக்கு வந்திருந்தார். கொழும்பிலும், திருமலை, மட்டக்களப்பு, மறைமாவட்டதின் பல பகுதிகளிலும், மன்னார் மறைமாவட்டத்திலும் நற்செய்திக் கூட்டங்களை நடாத்திய இவர். நற்செய்திப் பணிக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்திருப்பவர். கடந்த 23 வருடங்களாக நற்செய்திப் பணியாற்றும் சகோ. D ஜெயானந் அவர்கள் இந்தியாவின் இருபது மாநிலங்களிலும் ரஷ்யா உட்பட உலகின் பல நாடுகளிலும் நற்செய்தியை அறிவித்து, குணமாக்கும் வழிபாடுகளை நடாத்தி ஆயிரக்கணக்கான மக்களை இயேசுவின் பால் அழைத்து வந்துள்ளார். அவரைத் தொண்டன் வாசகர்களுக்காகவும் சந்தித்தோம்



**இன்று கல்விக்கான தெரிவுகள், தொழில் வாய்ப்பு வசதிகளுக்காக என்றுள்ள காலத்தில், உயர் கல்வியும் உயர் தொழில் வாய்ப்பும் பெற்றிருந்த தாங்கள் அவைகளைத் துறந்து முழுநேர நற்செய்திப்பணியாளராக மாற உங்களைத் தூண்டிய அல்லது பின்புலமாக இருந்த காரணிகள் என்ன?**

ஆரம்பத்தில் நான் ஒரு விமான ஓட்டியாகப் பயிற்சி பெற்று இருந்தேன். சில காரணங்களால் நான் தொடர்ந்து விமான ஓட்டியாக இருக்க முடியாமல் போனது. அதன்பின் நான் பொறியியல் கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெற்று பொறியியலாளரானேன். அந்தச் சமயத்தில் ஆண்டவர் யேசு எனக்குத் தரிசனமாகி என்னை இந்த ஊழியத்துக்கு அழைத்தார். அந்த அழைத்தலை ஏற்று நான் ஊழியம் புரிகின்ற போது உலகின் பல இடங்களுக்கும் சென்றேன். அப்போது நான் கண்டது ஒன்றே ஒன்றுதான். மக்கள் அறியாமல் பல பாவங்கள் செய்து வருகின்றார்கள் காரணம் அவர்களுடைய ஆன்மீகக் கண்கள் குருடாக இருக்கிறது. ஆகையால் நான் பட்டம் பதவி, பணம் எல்லாவற்றையும் இயேசுவுக்காக விட்டு, அவர் பின் சென்று உலகில் இருக்கிற எல்லா மக்களுடைய ஆன்மீகக் கண்கள் திறக்கப்பட வேண்டும், அவர்கள் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும், மகிழ்ச்சி, சமாதானம் வர வேண்டும், உண்மையான கடவுளை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று நான் இப்போது முழு ஊழியனாக மாறி இருக்கிறேன்

**வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலுள்ளவர்களும் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று சமூகம் எதிர்பார்க்கிறது அந்தவகையில் ஒரு நற்செய்திப் பணியாளன். அல்லது நற்செய்திப்பணியாளனாக வர விரும்புகின்றவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்று கருதுகிறீர்கள்?**

இறைவனுக்குப் பணி செய்கின்றவன் அவரது சித்தப்படியே நடக்க வேண்டும். கடவுள் பரிசுத்தராய் இருப்பதுபோல் அவரது பணியைச் செய்கின்றவனும் பரிசுத்தமாய், உண்மையாய், நேர்மையாய் தாழ்ச்சியுடன் இருக்க வேண்டும் யேசு எப்படி இருந்தாரோ அப்படி நாமும் இருந்தால்தான் நம்முடைய ஊழியத்திலே வெற்றி இருக்கும். பணியாளனுடைய வாழ்வில் பல்வேறு பிரச்சினைகள், தடைகள், அவமானங்கள் எல்லாம் வரலாம். இவற்றின் மத்தியிலே நாம் யேசுவைப் போல் வாழ வேண்டும் யேசுவுக்காக எதையும் இழக்கவும் தயாராய் இருக்க வேண்டும்.

**நீங்கள் கூறியதுபோல் யேசுவைப் போல் வாழ்வது, கிறிஸ்தவ விழுமியங்களைக் கடைப்பிடிப்பது போன்றவற்றுக்கு இன்றைய உலகிலே செல்வாக்குச் செலுத்துகின்ற சந்தைப் பொருளாதார வாழ்க்கை முறை பெரும் சவாலாக உள்ளதே!**

பரிசுத்த வேதாகமம் கூறுகிறது, கடைசி நாட்களிலே கடவுளுக்கு விரோதமான பல காரியங்களை சாத்தான் செய்வான் என்று. இது நடை பெறும்போது மக்கள் மத்தியிலே குழப்பங்கள் ஏற்படும். வேதாகமம் சொல்வதுபோல் விசுவாசத்தில் உள்ளவர்களே அதிலிருந்து விழுந்து போகின்ற சூழ்நிலைகள் வருகிறது! ஆகவே நாம் வேதாகமத்தை வாசித்து சரியாகப் புரிந்து கொண்டால் கடைசி நாட்களில் உலகம் எப்படி இருக்கும் என்று அறிந்து கொள்ள முடியும். அதற்கேற்ப வாழ முடியும், என்றும் வாழும் கடவுள் நமக்குக் கூறியிருப்பது போல் நாம் வாழ்ந்தால் சாத்தானை நாம் வெற்றி கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***ஆக, சந்தைப் பொருளாதாரமும். அதன் விளைவுகளும் சாத்தானின் விளையாட்டு (!) என்று நீங்கள் கூறுவதுபோல் தெரிகிறது. நான் முன்பு கேட்ட கேள்வியோடு தொடர்புடைய மற்றுமொரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். இன்று உலகு தழுவிய ஒரு பொருளாதாரக் கட்டமைப்பு உருவாகிக் கொண்டிருக்கிறது 'குளோபலிசம்' என்று சொல்லுகிறோம். பொருளாதார நலன்களுக்காக ஒட்டு மொத்த வாழ்வும் வடிவமைக்கப்படும் போக்கை காணுகின்றோம். அதேவேளை தீவிரவாதங்களும், இனவாதங்களும், மதவாதங்களும், தேசியவா தங்களும் நாடுகளிலே வளர்ந்து வருவதையும் பார்க்கின்றோம். இந்தச் சூழ்நிலையில் நற்செய்திப்பணியைக் கூட சந்தே கத்தோடும், பகைமை உணர்வோடும் பார்க்கின்ற போக்குக் காணப்படுகிறது. இதனை ஒரு நற்செய்திப்பணியாளன் எவ்வாறு எதிர்கொள்ள முடியும், சமாளிக்க முடியும் என்று நினைக்கிறீர்கள். ?***

ரஷ்யாவின் முன்னாள் பிரதமர் மிக்காயே ல் கொர்பச்சேவ் அவாகள் பதவியிலிருந்தபோது ஒரு வார்த்தை கூறினார். இந்த உலகத்தை யாராலுமே சீர்படுத்த முடியாது! இரண்டே இரண்டு வழிகள் உண்டு. அதனை பத்திரிகையாளர்கள் கேட்டார்கள். அவர் சொன்னார் உலகத்திலிருக்கிற எல்லா மக்களும் இயேசுவின் வார்த் தையின்படி நடக்க வேண்டும். அப்போது பத்திரிகையா ளர்கள் சொன்னார்கள், அது நடக்க முடியாதே! அதற்கு ரஷ்யப் பிரதமர், அப்படி நடக்க முடியாதென்றால் இயேசுவே இந்த உலகுக்கு வந்து ஆளவெண்டும் என்றார். பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது. கடைசி நாட்களில் பலவித பிரச்சினைகள் உலகில் இருக்கும், இயேசுவின் வருகை நெருங்கிக் கொண்டிருக்கிறது. நாம் ஊழியர்கள், விசுவாசிகள் விசுவாசமுள்ளவர்களாய் இருக்க வேண்டும். இயேசுவின் வருகையிலே எல்லாவற்றுக்கும் முடிவு வருமென்று வேதநூல் சொல்கிறது

(யேசுவின் வருகையிலே எல்லாவற்றுக்கும் முடிவு வருமென்பது சரிதான். அதுவரையில் பிரச்சினைகளை பிரச்சினைகளாகவேபாாத்துக்கொண்டு, அனுபவித்துக் கொண்டு இருப்பதுதானா? நாம் ஒன்றுமே செய்யக் கூடாதா என்று நினைத்துக் கொள்ளுகிறேன்.)

***நற்செய்திக் கூட்டங்கள் அருங்கொடைக் கூட்டங்கள், அவற்றிலே காணப்படுகின்ற ஆர்பரிப்புகள், ஆரவாரங்கள் எல்லாம் ஆன்மீக உணர்வை ஊட்டுவதற்குப் பதிலாக, அதன் வழியாக வாழ்க்கை முறையை மாற்றாமல் ஒருவகைப் போலியான திருப்தியை, ஆரவாரங்களுக்குள் கரைந்து போகின்ற ஒரு மயக்கத்தைத் தருகிறது. வாழ்க்கை பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்ற, தீர்வுகாணுகின்ற ஆற்றலைக் கொடுப்பதில்லை என்ற ஒரு கருத்து நிலவுகிறதே.***

குறிப்பாக சில நற்செய்திக் கூட்டங்களிலே அனேக மக்கள் கரங்களைத் தட்டி, சத்தமாக அல்லே லூயா, praise the lord என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இதைப் பார்க்கின்ற சிலர் இது என்ன இவர்கள் உணர்ச்சி வசப்பட்டு சத்தம் போடுகிறார்கள் என்று நினைக்கிறார்கள். அப்போஸ்தலர் பணியிலே பார்த்தால் இத்தகைய ஒரு நற்செய்திக் கூட்டத்தை தொடக்கி வைத்தவர் யாரென்றால் தந்தையாகிய கடவுளே. அவருடைய சித்தத்தின் படி யேசு சொன்னார்: 'நான் விண்ணகத்திற்குப் போக வேண்டும் நான் சென்ற பின்பு பரிசுத்த ஆவியானவரை ஊற்றுவேன்' என்று. பெந்தகொஸ்தே நாளன்று கன்னிமரியாளும், சீடர்களும், மற்றையோரும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட உடனே அவர்கள் சத்தமாக ஆண்டவரை ஆராதித்தார்கள். இந்த சத்தத்தைக் கேட்டு எல்லா மக்களுமே ஓடிவந்தார்கள். என்ன நடக்கிறது என்று பார்த்தார்கள். பார்த்த பலர் மனம்மாறி இயேசுவை மகிமைப் படுத்தினார்கள். சிலர் விசுவசிக்காமல் 'குடித்துவிட்டு உளருகிறார்கள்' என்று சொன்னார்கள் ஆகையால் கடவுளுடைய வல்லமையைப் புரிந்து கொள்ளா தவர்கள் குற்றங்கள் சொல்வார்கள்; புரிந்து கொண்டவர் களோ பரிசுத்தமாக இருப்பார்கள். பன்னிரண்டு சீடர்களிலே ஒருவன் பாவம் செய்தது போல் நற்செய்திக் கூட்டங் களிலும் சில இடங்களில் தவறுகள் நடக்கிறது. எல்லோ ரும் அப்படியல்ல.

***இனி உங்களது நீண்டகால நற்செய்திப் பணி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளலாமே!***

நான் 23 வருடமாக ஆண்டவருக்குப் பணி செய்து வருகிறேன். 1979ம் ஆண்டில் நான் ஆண்டவரைத் தரிசித்தேன். அவர் ஊழியத்துக்கு என்னை அழைத்தார். நான் என்னுடைய பணிக் காலத்திலே பல்வேறு அனுப வங்களை, துன்பங்களை, அவமானங்களை அடைந்திருக் கின்றேன். இவைகளுக்கு மத்தியில் என்னுடைய ஊழி யத்தை மட்டும் நான் விடவில்லை. ஆண்டவர் என்னைப் பல இடங்களுக்கும் அழைத்துக் கொண்டு சென்றார். அங்கெல்லாம் ஒன்றைமட்டும் பார்த்தேன். ஆவிக்குரிய வாழ்விலே பலரது கண்களும் மூடப்பட்டிருக்கின்றன. இந்த இடங்களிலே நான் ஆண்டவருடைய வாாத்தை யைச் சொல்லும் போது பல இடங்களிலும் பல மக்கள் விசுவசித்தார்கள். பாவத்தை விட்டிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருக்கிறார்கள் ஆண்டவர் குருடரின் கண்களைத் திறக்க வைத்தார். முடவர்களை நடக்க வைத்தார். பலவிதமான வியாதிகள் குணமானதை நான் பார்த்திருக்கிறேன். இவற்றில் முக்கியமானது இருவர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர்கள் செபம் செய்தவுடனே ஆண்டவர் அந்த இருவருக்கும் உயிரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தார். இத்தைய அற்புதங்களைப் பார்க்கும்போது யேசு இன்றும் என்றும் மாறாத கடவுள் என்பதைத்தான் நான் புரிந்து கொண்டேன்

***உங்களது இலங்கைப் பயணம் பற்றி***

இலங்கைக்கு நான் முதன் முறையாக வந்திருக்கிறேன். இலங்கை பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கிறது. நல்ல நாடு, சிறிய நாடு, ஆனால் உலகத்தில் பல இடங்களிலும் என்னென்ன பிரச்சினைகள் இருக்கிறதோ அவை இங்கேயும் இருக்கின்றன. இந்த பிரச்சினைகளிலிருந்து விடுபட வேண்டுமென்றால் அது ஆண்டவர் ஒருவரால்தான் முடியும். இன்று இலங்கை அரசாங்கமும், மக்களும் சமாதானத்துக்காக பலவித முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சமாதானம் இயேசுவினிடத்திலிருந்து மட்டுமே வரும். ஆகையால் இலங்கையில் இருக்கிற ஒவ்வொருவரும் கண்ணீர் சிந்தி, உபவாசத்தோடு செபிக்கும் போது இந்த நாட்டிலே இருக்கின்ற பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு வரும். மேலும் ஆயர் யோசப் கிங்ஸிலி சுவாம்பிள்ளை அவர்களுக்கும், அருள்தந்தை றொபின்சன் போல் அவர்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஏனென்றால் அவர்கள்தான் என்னை இலங்கைக்கு அழைத்தார்கள்

*(இறுதியாக நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க நமது நாட்டின் அமைதிக்காக செபித்தார். நன்றி கூறி விடை பெற்றோம்)*

**நேர்கண்டவர்**
**மலர்வேந்தன்**

---

# உலகத் தொடர்பு தினத்தை முன்னிட்டு
## மட்டக்களப்பு மாவட்ட எழுத்தாளர்களிடையே
## ‘தொண்டன்’ சஞ்சிகை நடாத்தும்
## சிறுகதைப் போட்டி

- சமூகத்தில் தொடர்பு சாதனங்களின் முக்கியத்துவத்தையும் அதன் விளைவுகளையும் கருவாக கொண்டிருக்க வேண்டும்
- தட்டச்சில் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமலும் கையெழுத்தில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
- தெரிவு செய்யப்படும் முதல் மூன்று கதைகளுக்கு பரிசு வழங்கப்படும்
- பெயர், முகவரிகள் தனியாக எழுதி இணைக்கப்பட வேண்டும்
- சொந்தப்படைப்பாக இருக்கவேண்டும் ஏற்கனவே பிரசுரமான கதைகள் போட்டிக்குத் தகுதியானவை அல்ல
- பரிசுக்குத் தெரிவாகும் கதைகள் தொண்டனில் பிரசுரமாகும்

**அனுப்ப வேண்டிய இறுதி நாள்**
**2002 ஜூன் 30**


முகவரி :-
சிறுகதை / கட்டுரைப்போட்டி
தொண்டன்
அ.பெ. எண் - 44
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவில் உதித்த யேசு சூரியன்

- வாகரைவாணன்



கோதுமை மணிகளும்
உன்னைக் காணும் போது
குதூகலத்தில்
குலுங்கிக்குலுங்கி
ஆடும்

மீன்களும்
நீரில் மிதந்து வந்து
வானவன் உந்தன்
வடிவழகைப்
பருகி நிற்கும்

இயற்கையின்
இறைவன் நீ
ஆனாலும்
சூரியனின் அழகில்
நீ
சொக்கிப் போவதுண்டு

காலையிலும்
மாலையிலும்
அதற்காகவே
காத்திருப்பாய்

வானத்திரையில்
அது
வரைந்து காட்டும்
வடிவங்கள் தான் எத்தனை?
மோனத்தில்
அதில் நீ
மொய்த்துக் கிடப்பாய்

சித்திரம் ஒவ்வொன்றும்
உன்னோடு
சினேகமாகி
விசித்திரமாகப் பேசும்
அதில் நீ
வீழ்ந்து போவாய்

வண்ணம் தான்
வாழ்க்கை
கண் முன்னே அது
கலைந்து போவதால்

எண்ணம் உன்னுள்
இப்படி எழும்
ஆனாலும்
உண்மை அதுவல்ல
எல்லாம் உன்
விளையாட்டு

சந்திரன் உதயத்திலும்
உனக்குச்
சரியான ஆசை
வந்திருந்து அதன்
வசமாகிப் போவாய்


மேக விரிப்பில்
அது
மெல்ல மெல்ல
நடக்கும் போது
தேகமெல்லாம் உனக்குத்
தேனருவி பாயும்

உச்சிவானில் உள்ள
அந்த
நட்சத்திர மாளிகையில்
ஒவ்வொரு மாதமும்
நிலாவுக்கு உற்சவமே
அப்போதெல்லாம்
சொப்பனத்தில் ஒரு
சொர்க்கமே கண்டாய்

ஒளியின் பொங்கல்
ஒவ்வொரு மாதமும்
நிகழும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வானப் பானை வழியும்
உனக்கோ அது
ஞானப்பானை ஆகும்

இயற்கையோடும்
மனிதரோடும்
இப்படி
இணைந்திருந்த நீ
உன்
இறுதியையும்
நன்றாகவே
அறிந்திருந்தாய்

அது ஒரு
பன்னிரண்டு மணிப்
பகல் ...............
சோகத்தால்
சூரியனின் முகம்
சுருங்கிப் போகின்றது
வானமெங்கும்
கறுப்புக் கொடிகளின் வரிசை

அலைக் குழந்தைகள்
விம்மி விம்மி அழுகின்றன
குழறிக் குழறிக்
குயில்களின் குரல்
அடைத்துப் போகின்றது
உறுமும் புலிகளும்
ஊமையாகின்றன
சிங்கங்களினால் சிலிர்க்க
முடியவில்லை
ஒவ்வொன்றிலும் துயரம்
ஒட்டிக் கிடக்கின்றது

மண்டையோட்டு
மலை அது!
அங்கே தான்
நீ
ஆணிகளால் மரத்தோடு
தைக்கப்பட்டு
காட்சிக்கு
வைக்கப்படுகின்றாய்
கடவுள்
மகனின்
கடைசி நேரம் அது

சிரசில்
சிங்காசனம்
போட்டிருக்கும் முட்கள்
கைகளையும் கால்களையும்
கட்டி முத்தமிடும்
ஆணிகள் .......

விலாவுக்குள்
நுழைந்து பார்த்த வேல் ..
ஒவ்வொரு நரம்பிலும்
ஊசியாக ஏறுகிறது....

வாதை தாங்க இல்லை
நீ
வாய் விட்டரற்றுகின்றாய்

அந்த நிலையிலும்
அப்பாவி மக்கள்
அறியாமற் செய்கின்றார்கள்
தப்பை மன்னியும்
தந்தையே என்று
பிரார்த்திக்கின்றாய்
முற்றும் முடிந்தது
என்று
முகம் கவிழ்கிறாய்
ஒரு
முற்றுப்புள்ளி விழுகிறது
அன்று ஒவ்வொன்றும்
அசைக்கப்படுகின்றது
பயத்திற்குள்
எல்லாம்
பதுங்குகின்றன.

ஆலயத்திரைச் சீலை
இரண்டு கட்சி ஆகின்றது

வாயைப் பிளக்கிறது
பூமி
அங்கே இருந்து
உயிரோடு மனிதர்
உத்தானிக்கின்றனர்

அற்புதத்தின் அரங்கமாக
உலகம் ஆகின்றது!

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலையூற்று கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின்

# பத்தாவது ஆண்டு நிறைவு விழா

## 1991 . 03 . 08 – 2002 . 03 . 08

வரலாறு கூறி அடியார்களைத் தம் பாதத் தண்டையில் வரவழைத்து, அருள் வரங்களை அள்ளிப்பொழிகின்ற அற்புத அன்னையாம் புனித லூர்து அன்னையின் யாத் திரை ஸ்தலமாகிய பாலை யூற்று திருப்பணித் தளத் திலே, முதல் அரும்பாய்த் துளிர்விட்ட "கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்" தனது பணிவாழ்வின் வளர்ச்சிப் பாதையில் பத்து ஆண்டுகளை நிறைவு செய்ததன் திருப்தியை கடந்த 2002.04.07ம் நாளன்று பெருவிழாவாகச் சிறப்பித்து மகிழ்வு கொண்டது.



ஆம்! அன்றைய தினம் காலையில் 6.30 மணிக்கு அமலமரித் தியாகிகள் சபையின் யாழ் மாகாணத் தலைவர் அருட்பணி அ. ஜீவேந்திரா போல் அடிகளார் தம்முடன் வருகை தந்திருந்த அருட்பணி. சந்திரபோஸ் அ.ம.தி., அருட்பணி லீனஸ் சொய்சா அ.ம.தி, பாலையூற்றின் உதவிப் பங்குத்தந்தை அருட்பணி பெனடிக்ற் யூஜின் அ.ம.தி ஆகியோருடன் இணைந்து சிறப்புத் திருப்பலியினை ஒப்புக் கொடுத்தார்.

திருப்பலிக்கு முன்னதாக பங்குத்தந்தையின் அழைப்பின்பேரில் யாழ் நகரிலிருந்து வருகைதந்த அருட்பணி.ஜீவேந்திரா போல் அ.ம.தி மற்றும் ஏனைய குருமைந்தர்களை ஆலய நுழைவாசலில் தமிழர் பண்பாடு கலாசார முறைப்படியே மலர் மாலை அணிவித்து, ஆரத்தி எடுத்து, சந்தனத் திலகமிட்டு வரவேற்கப்பட, ஒன்றிய உறுப்பினர்கள் சுடர் விளக்குகளைத் தமது கரங்களில் ஏந்திய வண்ணமாக பவனியாகத் திருப்பலிபீடம் அழைத்து வந்து குத்துவிளக்கிற்கு ஒளியேற்றப் பட்டதும் திருப்பலி ஆரம்பமாகியது.

திருப்பலியின்போது தமது அர்ப்பண வார்த்தைப் பாட்டைப் புதுப்பித்துக்கொண்ட ஒன்றிய உறுப்பினர்கள் திருப்பலியின் பின்பு ஆலய முன்றலில் பங்குத்தந்தை அருட்பணி ஜீவனதாஸ் பெர்ணாண்டோ அ.ம.தி. யாழ் மாகாண அ.ம.தி முதல்வர் ஜீவேந்திரா போல் ஆகியோர் முறையே பங்குக்கொடி, ஒன்றியக் கொடிகளை ஏற்றிவைக்க ஒன்றிய அங்கத்தவர்கள் தமது கொள்கைக் கீதத்தை இசைத்து மகிழ்வடைந்தனர்.

தொடர்ந்து அதிர்ஷ்டலாபச் சீட்டுக் குலுக்கல், மரதன் ஓட்டப்போட்டி என இடம்பெற்ற காலை நிகழ்வுகளின் சிறப்பம்சமாக பாலையூற்று புனித லூர்து அன்னை யாத்திரை ஸ்தலத்தின் நுழைவாயிலில் புதிதாக வடிவமைக்கப்பட்ட "வரவேற்பு வளைவு பெயர் பதாதை" சம்பிரதாயபூர்வமாக அருட்பணி. ஜீவேந்திரா போல் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

மீண்டும் மாலை 7.00 மணியளவில் L.R.அன்ரனி திறந்தவெளி அரங்கில் இடம்பெற்ற கலை நிகழ்வுகளின் போது பாலையூற்று கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் பத்தாவது ஆண்டு

நிறைவின் நினைவாக வெளியிடப்பட்ட சிறப்பு மலரின் முதற்பிரதியை பங்குத்தந்தை அருட்பணி ஜீவன தாஸ் பெர்ணாண்டோ அ.ம.தி அடிகள் அருட்பணி ஜீவேந்திரா போல் அமதி அடிகளுக்குக் கொடுத்தார். அதன்பின்பு அருட்பணி ஜீவேந்திரா போல் அடிகள், அருட்பணி ஜோர்ஜ் திசாநாயக்க (க.இ.ஒன்றிய இணைப்பாளர், திருமலை – மட்டுநகர் மறைமா வட்டம்) அடிகளுக்கும் மற்றும் குருக்கள், அருட் சகோதரிகளுக்கும் வழங்கி வைத்தார். அதன்பின் அருட்பணி ஜீவேந்திரா போல் அடிகள், ஒன்றிய இணைப்பாளர் முறையே சிறப்புரை வழங்கி தமது பாராட்டுக்களையும் வெளிப்படுத்தினார்.

மேலும் தலைமை வகித்து சிறப்புடன் வழிநடத்தி வந்த ஒன்றியத்தின் முன்னாள் தலைவர்கள் தற்போதைய அங்கத்தவர்களுக்கான ஒன்றியச்சின்னம், சிறப்பு மலர் வழங்கல், அதிர்ஷ்ட லாபச் சீட்டு, போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கல் போன்ற நிகழ்வினூடே இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள் மக்களின் பலத்த கரகோசப் பாராட்டுதல்களையும் பெற்றுக் கொண்டது.

குறிப்பாகச் சொல்வதாயின், உப பங்கான அன்புவழிபுரம் மறைக்கல்வி மாணவிகளது வரவேற்பு நடனம் மனதில் இடம்பிடித்துக் கொண்டது. அடுத்து "என் வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு காரியமும்..." என்று தொடரும் "வல்லமை கீதங்கள்" ஒலிநாடாவிலிருந்து ஒலித்த பாடலுக்கு பங்கின் சிறிய மரியாயின் சேனையினரும், திருப்பாலத்துவ சபைச் சிறுமிகளும் அபிநயம் பிடித்தாடியது நம் கண்களுக்கு விருந்து படைத்தது.

பாலையூற்று மறைக்கல்வி மாணவிகள் வழங்கிய "பரதமும் மேற்கத்திய நடனமும்" வழமையான நிகழ்வுகளிலிருந்து புதிய பாணியில் அமைந்திருந்தமையால் பலரும் தம்மை மறந்த நிலையில் ரசித்துப் பார்த்ததைக் காணக்கூடியதாகவும் இருந்தது. இவற்றுக் கெல்லாம் மேலாக திருமலை திருமறைக் கலாமன்ற உறுப்பினர் ஒருவரது நெறியாள்கையில் மேடையேறிய "மனிதம் சாவதில்லை" நாடகம் எமது ஒன்றிய உறுப்பினர்களது கலையார்வத்தையும், திறமைகளையும் நன்கு வெளிப்படுத்தின. இருந்தும் கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் 10வது ஆண்டு நிறைவு விழாவின் காலை நிகழ்வுகளில் இடம்பெற்ற மக்களின் பெரும் பங்களிப்பு மாலை நிகழ்வில் இல்லாமை சிறுகுறையாக இருந்த போதிலும், விழாவின் தரம் குன்றவில்லை. தொடரும் நாட்களிலும் ஒன்றியத்தின் பணி வளர, சிறப்புற நாமும் வாழ்த்துவோம்; செபிப்போம். ஏனெனில் ஒவ்வொரு கத்தோலிக்க இளைஞர்களும் திருச்சபையின் தூண்களாகவே உள்ளனர் அல்லவா?

தகவல் –
G. அல்பேட் – பாலையூற்று

## கொலம்பியாவில் குருவானவர் கொலை!

கொலம்பியாவில் ஏப்ரல் மாதம் 6 சனி அன்று மாலை திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்த குரு ஒருவர் கெரில்லாக்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். கொலம்பியாவில் குயிலா பகுதியில் லாஅர் ஜெண்டினா என்ற கிராமத்தில் திருப்பலி நிறைவேற்றிக் கொண்டிருந்த குரு சுட்டுக் கொல்லப்பட்டார். திருப்பலி நேரத்தில் அன்று அவரை நான்கு முறை அருகாமையில் சுட்டுக் கொன்றுள்ளனர் கெரில்லாக்கள். கொலம்பியாவின் காலி பேராயர் அல்பியா கொலை செய்யப்பட்ட மூன்று வாரங்களுக்குள் இக்குருவும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளது கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரிகளுக்கு நாட்டில் இருக்கும் அச்சுறுத்தலை உறுதி செய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகத்தின் நிழலில்

R. தேவகுமாரி
பாலையூற்று

சிறுகதை

கனடாவில் அது குளிர் காலம். கம்பளி சுவெட்டரையும் துளைத்துக் கொண்டு பனி சந்திரனின் தோலை வாட்டியது. அப்போது திடீரென்று அவன் பொக்கட்டிலுள்ள 'செல் போன்' கிணுகிணுத்தது. 'இந்த நேரத்தில யாரின்ற கோலா இருக்கும்....''? சிந்தித்தபடியே செல் போனை காதில் வைத்தான். 'ஹலோ ...யார்...?' 'ஹலோ நான் யாழ்ப்பாணத்தில இருந்து அம்மா கதைக்கிறன்..... எப்படி மனே சுகமா இருக்கிறாயா?' இரண்டு மூன்று வார்த்தைகள் பேசிக் கொண்டிருக்கும் போதே தொ.பே தொடர்பு. துண்டிக்கப் பட்டுவிட்டது. ' ஓ.... அம்மா கார்ட் போட்டு கதைச்சிருக்கிறா போல. கட்டாகிட்டு. ஆனா ..... ஏன் அம்மா அங்க இருந்து திடீரென்று கோல் பண்ணோணும்...? 10 நிமிடங்கள் கழித்து மீண்டும் 'செல்போன்' சிணுங்கியது 'ஹலோ.... சந்திரன்... நான் அம்மாதான். வீட்டில விசேஷம் தம்பி ... உன்ர மூத்த அக்காவின்ர மகள் சடங்கா கிட்டாள். நீதானே ஒரேயொரு தாய் மாமன், நீ வந்துதான் எல்லாத்தையும் முடிச்சு வைக்கோணும். மகன் ... நீ போய் 13, 14 வருஷங்கள் ஆகுது மனே! இந்த சாட்டோடயாவது ஊருக்கு வா 'தனது தாயின் குரலில் அந்த விசேஷமான செய்தியைக் கேட்க. அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியாய் இருந்தது. தாயாரின் ஆசைப் படியும் இலங்கை செல்லத் தயாராகினான் சந்திரன்.

கனடாவில் பல வருடங்களைக் கழித்துவிட்டு தனது தாயகமான இலங்கை திரும்பிய சந்திரன் கொழும்பில் லொட்ஜ் ஒன்றில் தங்கினான். வெளிநாட்டில் என்னதான் பஞ்சு மெத்தையும் ஏசி பூட்டிய அறைகளும் இருந்தாலும் தனது தாயகத்தில் வந்து தலைசாய்த்த போது தான் அவனுக்கு நிம்மதியான தூக்கம் கண்களைத் தழுவிக் கொண்டது.





சந்திரன் தங்கியிருந்தது 'லொட்ஜ் என்பதால் Alarm மணிக்கூடு அவன் காதுகளைக் கிள்ள முன்பு அங்கு தங்கியிருந்தவர்களின் சத்தம் அவனைத் தட்டியெழுப்பியது. சற்று அலுப்போடே எழுந்து குளித்துவிட்டு கண்ணாடி முன்னால் நின்ற சந்திரனின் தலையில் மினுமினுத்த சில நரை முடிகள் அவனுடைய பாடுகளில் பொறுப்புகளில் கழிந்த வருடங்களின் எண்ணிக்கையை எடுத்துக் காட்டியது. கண்ணாடியைப் பார்த்து பெருமூச்சு விட்டபடியே தலை வாரிய சந்திரன் படுக்கையில் கிடந்த பத்திரிகையை துளாவினான். அப்போதுதான் அந்த 18ம் பக்கத்திலிருந்த 'மணமக்கள் தேவை' எனும் பகுதி அவன் கண்களிலும், நெஞ்சிலும் வேகமாக தைத்துக் கொண்டது. எத்தனை வகையான மனிதர்கள்! எத்தனை வகையான எதிர் பாரப்புக்கள்! விலை பேசும் பட்டியல்கள். 40, 45, 47, எனும் வயதுடையவர்களின் பட்டியல் விபரங்களைப் பாத்துக் கொண்டு போன சந்திரனுக்கு அவர்களின் நிலை அனுபவ ரீதியாகப் புரிந்திருந்தது. சந்திரன் இளவயதாக இருந்தபோது அவனுடைய வீட்டில் எத்தனை வேதனையான சம்பவங்களை அனுபவித்திருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய காலகட்டத்தில் தந்தையை இழந்த சந்திரனின் குடும்பத்தில் இரண்டு அக்கா, மூன்று தங்கை நடுவில் சந்திரன் என அமைந்திருந்தது. 30 வயதையும் தாண்டிவிட்ட அக்கா மாரை கரை சேர்க்க அவனது தாய் எத்தனை பாடுகள் பட்டாள்! நரையைத் தொட்டு விட்டும் மணக் கோலத்திற்காக காத்திருந்த இரண்டு மூத்த சகோதரிகளின் நிலை இளைய சகோதரிகளுக்கும் வரக்கூடா தென்ற நோக்கோடு சந்திரன் வெளிநாடு போகப் பட்டபாடு அவனுக்குத்தான் தெரியும்! கனடாவிலிருக்கும் தூரத்து உறவினர்களிடம் தன்னை எடுக்கும்படியாக மன்றாடிப் போய்ச் சேர்ந்தான். அவனது இளமை, ஆசாபாசங்கள் அனைத்தையும் காசோலைகளாக்கி சகோதரிகளின் துக்கங்களுக்கும் கறைகளுக்கும் உயிர் கொடுத்தான். அந்தச் சுமைகளில் இத்தனை வருடங்களும் எப்படி ஓடியிருக்கிறது! அவனுக்கே ஆச்சரியம்தான். அன்னையின் கையால் உண்ணும் சுடு சோறு, வயல் வெட்டும் போது வழிந்தோடும் சுகமான வியர்வை சிறைப்பட்டுக்கிடந்த சந்திரனின் மனதில் ஒரு வகை அமைதி. ஒவ்வொரு மனிதரின் நல்வாழ்வும் மற்றவரின் தியாகத்தில்தான் தங்கியுள்ளது என்ற தத்துவத்தினை மெய்ப்பித்துக் கொண்ட சந்திரனின் இதயத்தில் "கடவுள் தனக்கென்று தந்த பொறுப்புக்களை செவ்வனே செய்து முடித்து விட்டேன்" என்ற பெருமிதம். உழைப்பெனும் பாதையில் ஓடிக் களைத்த தனது பாதங்கள், இயற்கை வனப்புகள் கொண்ட மண் வாசனை கமழும் தாய் நாட்டில் இளைப்பாற சங்கமமாகிக் கொண்டதில் சந்திரனுக்கு எத்தனை ஆனந்தம்! கடந்தகால நினைவுகளை பத்திரிகைப் பக்கத்தோடே புரட்டி முடித்த சந்திரன் லொட்ஜை விட்டு நகர்ந்தான்.



## பணியாளர் L. S. அன்ரனி அவர்கள் இறைபதம் அடைந்தார்

திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தில் உபதேசியாராகப் பணிபுரிந்து வரும், தொண்டன் விற்பனையாளருமான திரு L.S. அன்ரனி அவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் 23ந் திகதி காலமானார்.

பல தசாப்தங்களாக திருச்சபைப் பணிகளில் ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் உழைத்த அவர் தொண்டன் சஞ்சிகை விநியோகத்தில் அனைவரிலும் முன்னின்றார். அதிகமான பிரதிகளை விநியோகித்து வந்தவர் அவரே. அனைவருடனும் அன்புடனும் பணிவுடனும் பழகிய அவர் உதவி செய்யப் பின் நிற்காதவர் என்பதை அனுபவரீதியாக உணர்ந்திருக்கிறோம். எப்போதும் நேர்மையோடும், உண்மையோடும் நடந்து கொண்ட அவர் நாம் அவரோடு தொடர்பு கொண்டிருந்த பத்தொன்பது வருடங்களில் தொண்டன் விநியோகத்தில் ஒரு மாதமாவது; ஒரு சதமாவது பாக்கி வைத்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் அவர் தனித்துவம் மிக்க அற்புதமான மனிதர்.

திருகோணமலையில் 2000 ஆண்டில் உலகத் தொர்பு தின விழாவை நாம் நடாத்திய போது பல விதங்களிலும் அவரும் அவர் குடும்பத்தவர்களும் எமக்கு உதவியதை இந்தவேளையில் நன்றியோடு நினைத்துப் பார்க்கிறோம். தம் வாழ்நாளில் பெரும் பகுதியை திருச்சபைப் பணிகளுக்காகவே அர்ப்பணித்த அந்த நல்ல மனிதர் மாரடைப்பால் காலமானார் என்று அறிந்த போது நாமும் அதிர்ந்து போனோம். பணி செய்தோர் உடல்கள் சாகலாம் அவர் நினைவுகள் சாவதில்லை. நீடித்த பணியினால் பலரது நெஞ்சங்களிலும் நிலைத்துவிட்ட திரு L.S அன்ரனி அவர்களுக்குத் தொண்டன் நன்றியோடு அஞ்சலி செலுத்துகிறது! அவரது ஆன்மா வான் வீட்டில் அமைதியில் இளைப்பாற இறைஞ்சுவதோடு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்

மலர்வேந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வுப் பொருள் – 2

**பண்பாட்டு விழுமியங்கள் மூலம் நிறைவான வாழ்வைப் பெறுவோம்**

**பாடம் 4**

**இதயத்தில் இரக்கம் எனும் மலர் மலரட்டும்**


- இலங்கைச் சமுதாயத்தில் மிக உறுதியாக நிலைத்திருந்த பண்பாட்டு விழுமியங்கள் இன்று பலவீனமடைந்திருப்பதைக் காணமுடிகிறது.
- இந்நிலையில் மாணவர் கிறிஸ்தவ பண்பாட்டு விழுமியங்களையறிந்துகொள்வது மிகக்கஷ்டமாக வுள்ளது. இதனால் இளைஞர் தவறான வழிகளில் செல்லும் சந்தர்ப்பங்கள் உருவாகி அவர்கட்குப் பெருஞ் சுமையாகின்றன.
- மாணவர் சரியான பண்பாட்டு விழுமியங்களை யறிந்து கொள்வதவசியம்
- திருவிவிலியத்தில் காணும் உண்மையான பண் பாட்டு விழுமியங்களைத் தேடிக்கண்டடைந்த மூவர்
  1) காணாமற் போன ஆடு லூக்கா 15: 1-7
  2) காணாமற்போன மகன் லூக்கா 15: 11-32
  3) காணாமற்போன திராக்மா லூக்கா 15: 8-10
- நாம் வாழும் சமுதாயத்தின் பெறுமதிகள், மனிதரின் செயல்கள் மூலம் மதிப்பீடு செய்யப்படுகின்றன
- நீதி, நேர்மை, வஞ்சகமின்மை, சகோதர அன்பு, நல்வாழ்வு போன்றன சமுதாயத்துக்கு நன்மை தருவன
- நற்பண்புகளைப் பின்பற்றி நடக்கும் மனிதனிடத்தில் நற்செய்கைகள் காணப்படும்; தீயவனிடம் தீய செய்கைகள் காணப்படும்
- புனித லூக்கா 6: 43 -45
- கிறிஸ்தவனுக்கு அழிந்துபோகும் கிறிஸ்தவப் பண்பாடுகள் சவாலாக உள்ள அதேவேளை பண் பாட்டு விழுமியங்களை வளாக்கும் பொறுப்பும் சவாலாகிறது
- இன்றைய சவால்களில் சில:
  1) மனிதன் ஒரு வியாபாரப் பொருளாக மாறி திறமை, உணர்வு அற்றவனாக வாழ்தல்
  2) கலாசாரப் பண்பாட்டு மதிப்பை அறியாதவனாக வாழுதல்
  3) உண்மையை வெளியிடப் பயந்தவனாக வாழுதல்
  4) அரசியல் பழிவாங்கலுக்குட்பட்டுப் பல பிழையான செயல்களில் ஈடுபடுபவனாக வாழுதல் ஆகியன அமைகின்றன.
- ஆன்மீக வாழ்வுக்கான வழிநடத்தல்கள் குறைவு
- இறையரசின் மதிப்பீடுகளை மறந்த சில கிறிஸ்த வர்கள் உடன்படிக்கை வாழ்வு, நற்செய்தி பரப்பும் பொறுப்பு அனைத்தையும் மறந்துவிடுகின்றனர்
- சமூகத் தொடர்புச் சாதனங்கள் சகல நற்பண்புக ளையும் இளைஞரையும் அடிமைப்படுத்தியுள்ளன.
- மனிதருக்கு உள்ளேயிருந்து வருவதே அவர்களைத் தீட்டுப்படுத்தும்
- நமது நாடு, சமுதாயம் ஆகியவற்றிற்கேற்ப பண் பாடுகளை மதித்து நடக்கவேண்டும்.'.
- முழு மனித சமுதாயமும் ஒருதாய்மக்கள் என்றும், மனித சமுதாயத்தின் தந்தை இறைவனே என்றும் கிறிஸ்து கூறியுள்ளார்.

## மாணவர் பக்கம்

க.பொ.த. (சாதாரணம்)

– கத்தோலிக்கம் –

* மெற்றில்டா



- தம்மைப் பின்பற்றுவோர் இரக்கச் செயல்களைச் செய்ய வேண்டுமெனக் கிறிஸ்து அறிவுரை கூறியு ள்ளார்
- யோவான் 15: 12-13
- மத்தேயு 5: 43-44
- கிறிஸ்து காலத்திலும் பண்பாட்டுச் சீர்கேடு இருந்தது காட்டிக் கொடுத்தல், அவமானப்படுத்துதல், பொய்ச் சாட்சி சொல்லுதல், அநீதித் தீர்ப்புக்கள், வாதை செய்து மரணிக்க வைத்தல், ஆகியன அங்கிருந்தன
- தமக்குக் கொடுமை செய்வோருக்குச் சிலுவையி லிருந்து மன்னிப்பு வழங்கிய கிறிஸ்து எம்மிடமும் அதையே எதிர்பார்க்கிறார்
- உலகில் சமயங்கள் வழியாகத் தேசிய மனிதத்துவ மதிப்பீடுகள் வளர்கின்றன
- இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபை உலகளாவிய பண்பாட்டு விழுமியங்களையும். இந்நாட்டுப் பண் பாட்டு விழுமியங்களையும் பாதுகாத்து பூரண மனிதத்துவத்தை நிலைநாட்டும் நடவடிக்கை களிலீடுபட்டுள்ளது. அவையாவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) திருச்சபைச் சமூகம் சுற்றுமடல்கள் மூலம் நல்லுரை வழங்குதல்
2) பாப்பரசரின் அதிகாரபூர்வமான சட்டதிட்டங்கள் மூலம் நடத்துதல்
3) நற்செய்தி மூலம் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு விளக்கங் கொடுத்தல்
4) மறைபரப்பு பணி மூலம் கிறிஸ்துவை உலகிற்கு அறிமுகஞ் செய்தல்
5) பொதுவழிபாட்டின் மூலம், இறையொன்றிப்பை நோக்கி வழிநடத்துதல்
6) திருவருட் சாதனங்களை வழங்குவதன் மூலம் தூய்மையாக வழிநடத்துதல்
7) பலவித சேவைகள் மூலம் நல்லதொரு குடும்ப வாழ்வைத் தெரிவதற்குதவுதல்
8) மறையறிவை வழங்குவதால் முழுமையான வாழ்வுக்கு வழி நடத்துதல்

## 5ம் பாடம்

## கைகொடுத்துப் பார்ப்போம்

- இன்றைய சமுதாய நல்வாழ்வுக்குச் சகோதரத்துவம், ஒற்றுமை, நேர்மை, சமத்துவம், நீதி, விசுவாசம், பொதுத்தன்மை, சமாதானம், ஆகியன தேவையாகின்றன
- மனித இனத்தின் பூரணத்துவம், நல்லொழுக்க விழுமியம் ஆகியன பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளன.
- கிறிஸ்து, வாழ்கையில் சமாதானம், சகோதரத்துவம், நீதி ஒருமைப்பாடுள்ள நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவதே அவரது எண்ணமாயிருந்தது யோவான் 17 : 21
- பொதுத்தன்மை, சமத்துவம், நீதி போன்ற பண்புகளுள்ள சமுதாயம் பூரணமானதாக இருக்கும்.
- மக்களுக்குப் பணிபுரியும் கிறிஸ்தவர்கள் இயற்கைச் செல்வங்களைப் பொது நலனுக்காகப் பயன்படுத்துவது கடமையாகும்.
- முன்மாதிரிகையால் சமுதாயத்தில் மனிதப்பண்புகளைப் பாதுகாப்பது அவர்களது கடமையாகும்
  1) சமாதானம் மத்தேயு 5 : 9
  2) பொதுத் தன்மை சீராக் 35 : 12
  3) சமத்துவம் தொடக்கநூல் 2 : 27
  4) நீதியை நிலைநாட்டுதல் மத்தேயு 5 :10
- குடும்பம், பாடசாலை, சமுதாயம் என்பவற்றில் இவ்வாறான நிலையை ஏற்படுத்த முயற்சியெடுக்க வேண்டியது கிறிஸ்தவர்களின் கடமையாகும் எசாயா 1 : 17
- முழு மனித சமுதாயம் ஒரு குடும்பமாகும், அதன் தந்தை இறைவன்
- இறைவன் முன்னால் அனைவரும் சமம்
- நற்பண்புகள் யாவற்றுக்கும் ஊற்று இறைவனே
- நாம் காணும் சகோதரர்க்கு அன்பு செய்வதன்மூலம் இறையை அன்பு செய்யலாம்
- மற்றவர்களை அன்பு செய்வது பற்றித் தூய பவுல் 1 கொரிந்தியர் 13: 4-13 பகுதியில் கூறுகிறாா
- பண்பாட்டு விழுமியங்களைப் போதிக்கும் இறை வார்த்தையைத், தியானித்தல் மூலமும், செபத்தின் மூலமும் அறிகிறோம்
- இறைவனுடன் உரையாடுவதே செபம்
- செபத்தால் இறையரசைவரும்படி கேட்கவும், இறையரசின் மதிப்பீடுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும் எமக்கு இறைவரம் கிடைக்கின்றது

## 6ம் பாடம்

## இறை மனிதத் தொடர்பைக் கட்டியெழுப்புவோம்

- மத்தேயு 25:40
- உடலைச் சாந்த 7 இரக்கச் செயல்கள்
- கிறிஸ்துவைப் போல் செயற்படவும், சிந்திக்கவும், பார்க்கவும் கிறிஸ்தவப் பண்பாடுகள் நமக்கு வழி காட்டுகின்றன.
- சகோதர அன்பு, நீதி காட்டுதல், இறை சித்தப்படி நடத்தல் இத்தகைய பண்பாடுகளாகும்
  1) எமது விசுவாசத்தைப் பயமின்றி வெளிப்படுத்தவும்
  2) எமது உடைமைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து சகோதர மனப்பான்மையுடன் வாழவும்
  3) ஆசைகளை அடக்கியாளவும்
  4) வஞ்சகச் செயல்களை விலக்கிப் பிழைகளைச் சுட்டிக்காட்டித் திருத்தவும்
  5) சிந்தனை சொல் செயல் யாவும் தூய்மையாகவும்
  6) இரக்கச் செயல்களிலீடுபடவும்
  7) பகைவரை அன்பு செய்யவும்
  8) மனிதரின் வாழ்வு நிலைகளைப் பாராது உதவி செய்யவும்
  9) பிரதிபலன் பெறும் நோக்கமின்றிக் கொடுக்கவும்
  10) மற்றவர் நமக்கு என்ன செய்யவேண்டுமென விரும்புகிறோமோ அதை நாம் மற்றவர்க்குச் செய்யவும்
  11) எதிர்பார்ப்புக்கு மேல் உதவி செய்யவும் கிறிஸ்துவைப் பின்பற்றவும் நாம் முன்வர வேண்டும்
- லூக்கா 4: 34- 35
- கிறிஸ்தவன் கிறிஸ்துவின் மதிப்பீடுகளைப் பின்பற்றாவிட்டால் அவரைப் போல் செயற்பட முடியாது
- நல்வாழ்வு வாழ்ந்து, சமுதாயத்திற்கு நல்லவை செய்பவனிடத்தில் கிறிஸ்துவைக் காணலாம் அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) பொது ஆராதனைகளில் கருத்துள்ள முறையில் பங்குபற்றுதல்
2) செபவாழ்வு வாழுதல்
3) தியானத்திலீடுபடுதல்
4) திருச்சபையின் வரலாற்றை கற்றறிதல்
5) கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை கற்றறிதல்
6) தூய ஆவியின் கொடைகளாலும் கனிகளாலும் நிறைந்திருத்தல் என்பவை வேண்டும்

- தூய ஆவியின் கனிகள் கலாத்தியர் 5:22-23
- தூய ஆவியின் கொடைகள் ஞானம், புத்தி, விமரிசை, திடம், பக்தி, தேவபயம்
- உலகக் கலாசாரம் எல்லோருக்கும் பொதுவானது
- கிறிஸ்துவின் படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதனால் உலகளாவிய பண்பாடுகளைக் கிறிஸ்தவர்களான நாம் பின்பற்றுகிறோம்
- மனித சமுதாயம் சகோதரத்துவத்தில் கட்டியெழுப் படவேண்டுமென்பது இறைசித்தம் மத்தேயு 25: 40
- ஒவ்வொருவரும் தாம் வாழும் சமுதாய நலனுக்காகச் செயற்படுவது கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வதாக இருக்கும் மத்தேயு 25 : 42-43
- கடைசி நாளில் (உலக முடிவில்) தீர்ப்பானது இவ் வுலகப் பண்பாடுகளில் தங்கியிருக்கும்
- மனித மேன்மையைப் பாதுகாத்தல், குடும்பத்தா பனத்தைப் பாதுகாத்தல் ஆகியன எம்மிடம் ஒப்படைக்கப்படும் பொறுப்புக்களாகும்.

# உறுதியான மனம் ஆன்மீகத்தின் பலன்

சர்வாதிகாரி ஹிட்லரின் ஆட்சியின் போது ஆயிரக்கணக்கான யூதர்கள் மற்றும் நாடோடி இன மக்கள் நாஜி முகாமில் அடைக்கப்பட்டிருந்தனர். இரவும் பகலும் கடின வேலை செய்ய மக்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். இவர்களுக்குப் போதிய உணவில்லை. கடுமையான குளிரிலும் போர்த்திக் கொள்ளப் போதுமான துணிஇல்லை. இவற்றின் விளைவாகப் பெரும்பாலோர் மனம் உடைந்து போயினர். பலர் நோய்வாய்ப்பட்டு இறந்தனர். இத்தனை இன்னல்கள், கொடுமை களுக்கு மத்தியிலும் மிகச் சிலர் மனம் தளராது உறுதியாக இருந்தனர்.

இவர்கள் இவ்வளவு உறுதியாக இருப்பதற்குக் காரணம் என்ன? இக்கேள்வி அந்த முகாமிலிருந்த விக்டர் பிராங்கின் என்பவரின் மனதைக் குடைந்தது. இவரும் இம் முகாமில் தம் அருமைத்தாய், தந்தை, சகோதரனையும், அன்பு மனைவியையும் இழந்து துடித்தார். தம் கேள்விக்குப் பதில் காணும் நோக்கில் முகாமிலுள்ளவர்களை நேர்காணல் கண்டார். இதன் பயனாக 1960களில் விக்டர் பிராங்கின் வாழ்வுக்கு அர்தம் தேடும் மனிதர் (man's for Meaning An Introduction to lOGOTHERAPY) என்ற நூலை எழுதினார்.

இந்நூலின் மையச் சுருதியாக அமைந்திருக்கும் கருத்து ஒருவரது வாழ்வில் ஓர் இலட்சியப்பிடிப்பு இருந்துவிட்டால் எத்தனை இன்னல் இடர்பாடுகளுக்கு மத்தியிலும் அவர் உறுதியாக வாழ்ந்து காட்டுவார். உயர்ந்த இலட்சியப் பிடிப்பு, சீரிய செயற்பாட்டுத் துடிப்பு இதற்கு இன்னொரு பெயர்தான் ஆன்மீகம் அல்லது அருள் வாழ்வு அல்லது உயரிய வாழ்வு நெறி. ◆

(தோழன்)

## அனைவரும் குழந்தைகளே!

*மனிதர்களில் பலர் அறிவில் வளர்ந்திருக்கலாம், ஆற்றலில் வளர்ந்திருக்கலாம், பணம், பதவி, பட்டம், அழகு, ஆடம்பரம் அனைத்திலும் சிறந்திருக்கலாம். ஆனால் கவலைகளைப் பொறுத்தவரையில் மனிதர்கள் அனைவரும் அழுகின்ற குழந்தைகளே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார சுரண்டலும் சிறுவர்களும்

வீங்கிய விரல்களும், வலிக்கும் நுரையீரல்களும், கூனிய முதுகுகளும் கொண்ட சிறுபிள்ளைகளே உலகில் எழில்மிகு கம்பளங்கள் சிலவற்றை உருவாக்குகிறார்கள்.

பாக்கிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் பல்லாயிரக்கணக்கான சிறுவர், சிறுமியர் விளையாடவோ, பாடசாலை செல்லவோ, பாலர் பருவத்தை அனுபவிக்கவோ நேரமின்றி வேலை செய்கிறார்கள். கோடிக்கணக்கான டொலர் பெறுமதி வாய்ந்த ஏற்றுமதித் தொழிலை நிலை பெறச் செய்துவரும் இவர்கள் பெறும் ஊதியமோ அன்றாட சீவியத்துக்குக் கூடப் போதுமானதன்று. பிஞ்சு விரல்கள் துரிதமாக இயங்கும் பருவமாகிய ஆறு, ஏழு வயதிலேயே இவர்கள் கம்பளங்களுக்கு முடிச்சுப் போடப் பயில்கிறார்கள். ஆனால், நெசவுத் தறிக்கு சொந்தமானவர்கள் இவர்களை விரும்பக் காரணம் அவர்களின் கீழ்ப்படிவும், அற்ப சம்பளத்துக்கு மிக மோசமான நிலைமைகளில் வேலை செய்ய இவர்கள் உடன்படுவதுமேயாகும்.

கம்பள நெசவு சிரமமிக்க, ஆரோக்கியத்தை கெடுக்கின்ற தொழிலாகும், சிறுவர், சிறுமியர் குந்தியிருந்து கம்பளத் தூளை சுவாசித்து, கண்கள், விரல்கள் வலிக்க மணிக்கணக்கில் வேலை செய்வார்கள். முடிச்சுகளைப் போடுவதற்கு அவர்கள் உபயோகிக்கும் அரிவாள் போன்ற கருவி விரல்களில் கொப்புளங்களை தோற்றுவிக்கும். கம்பளத்தின் இரசாயனச் சாயங்களில் இவ்விரல்கள் தோயும் போது வலி மேலும் மோசமாகும். அவர்கள் வளரும் போது சில சமயங்களில் முதுகில் கூனல் உண்டாவதுண்டு. இச்சிறுவர்கள் வயதடையும் பருவத்தில் பெரும்பாலானவர்கள் நோயாளிகளாக மாறி வேலையிலிருந்து விலகிவிடுகிறார்கள். அநேக சந்தர்ப்பங்களில் இவர்கள் குடும்பத்தைக் காப்பாற்றும் பொருட்டு தமது சொந்தப் பிள்ளைகளையே தனது முன்னைய வேலைத் தலங்களுக்கு அனுப்பி வைக்கிறார்கள். இவ்வாறாக சுரண்டல் சுழன்று கொண்டே போகிறது.

சிறுவரைச் சுரண்டி வாழும் வழக்கம் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்துக்கு மட்டும் உரியதல்ல வளர்முக நாடுகளில் மட்டுமல்லாமல் அநேக தொழில்மய நாடுகளிலும் பல இலட்சக் கணக்கான சிறுவர்கள் சிறு பராயத்திலேயே வேலை செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். பலருக்கு வேலை வேதனையின் உறைவிடம். அதற்கு ஏதுவாகவுள்ள நிலைமைகள் குறிப்பாக வறுமை. இது இரவோடிரவாக மறையக் கூடியதொன்றல்ல ஆயினும், அரசாங்கங்கள் மனம்வைத்தால் இச் சுரண்டலையும் மனித உரிமைகளை மறுக்கும் ஏனைய துர்நடத்தைகளையும் ஒழித்துவிடமுடியும்.

மிக வறிய சமூகங்களில் சிறுவர்கள் தனித்தோ தமது பெற்றோர் அல்லது உறவினர்களுடன் சேர்ந்தோ, வேலை செய்வதைக் காணக் கூடியதாக உள்ளது. பானங்கள், சிற்றுண்டிகள், பத்திரிகைகள் போன்ற பல பண்டங்களை அவர்கள் அலைந்து திரிந்து விற்கிறார்கள். பிறேசில் நாட்டில் சிறுவர்கள் வாழைத்தோட்டங்களில் வேலை செய்கிறார்கள். கொலம்பியாவில் செங்கற்களைச் சுமக்கிறார்கள். மொராக்கோவில் ஓடுகளுக்குக் களி உடைக்கிறார்கள். எகிப்தில் கந்தைத் துணிகள் மற்றும் கழிவுகளைச் சேகரிக்கிறார்கள். சூடானில் பஞ்சு அறுவடை செய்கிறார்கள். இலங்கையில் வீட்டுப் பணியாளர்களாக வேலை செய்கிறார்கள்.

பெரும்பாலான துஷ்பிரயோகங்கள் விவசாயத்துறை, நகர்ப்புற பொருளாதாரத்துறை, மற்றும் வீட்டுப்பணி ஆகியவற்றில் இடம் பெறுகின்றன. வீடுகளில் வேலைசெய்யும் சிறுமிகள் பெரும் உபத்திரவங்களுக்கும், சுரண்டல்களுக்கும் உள்ளாகிறார்கள். இந்த விபரீதங்களுக்கு உந்து சக்தியாய் அமைவன வறுமை, சனப் பெருக்கம், தொழில்மயமாக்குதல், மற்றும் நகர்ப்புறங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரித வளர்ச்சி என்பனவாகும்.

பிறரின் காணிகளில் கூலிகளாக வேலை செய்வதால் நகர்சாரந்த கூலியாட்களுக்குக் கிடைக்கும் சட்டப் பாதுகாப்பு கிராமப்புற கூலியாட் களுக்குக் கிடைப்பதில்லை. பிள்ளைகளையும் கூட்டிவந்து வேலை செய்ய வேண்டுமென்ற நிபந்தனையில் வேலைக்கு அமர்த்தப்படுவது சாதாரண வழக்கமாக உள்ளது. இதனால் இயந்திரங்களினால் ஏற்படக் கூடிய விபத்துக்களுக்கும், துன்பந்தரும் கிருமி நாசினிகள் , களைநாசினிகளுக்கும் சிறுவர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. இது கிராமப் பகுதிகளில் சிறுவர் மரணம், நோய், போசாக்கின்மை, ஊனம், எழுத்தறிவின்மை என்பன அதிகரிப்பதற்கும் பெருமளவு ஏதுவாகின்றன.

வளர்முக உலகில் முறைசாராத் தொழில் முயற்சிகள் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றன. சிறுவர் உழைப்பைச் சுரண்டி துரிதமாக வளர்ந்துவரும் முறைசாராத் தொழில் துறையானது, கம்பளம் புனைதல், செங்கல் தயாரித்தல், அகழ்தல், கல்லுடைத்தல், கைப்பணிகள், விளையாட்டுப் பொருட்களை உற்பத்தி செய்தல், சப்பாத்து மினுக்குதல் தொடக்கம் பாடசாலைகளில் சிறுவர்கள் பயன்படுத்தும் பென்சில் தயாரித்தல் ஈறாக சகல முயற்சிகளையும் உள்ளடக்குகிறது.

வீட்டுப் பணியாளர்களாக வேலை செய்யும் சிறுவர், சிறுமியர்களே மிக மோசமாக சுரண்டப்படுவோராவர். இவர்களைப் பாதுகாப்பதும் மிகக் கடினம், சுரண்டல்களைத் தேடிக்கண்டு பிடித்து, பொதுமக்களுக்குப் பிரசாரம் செய்ய வேண்டியது வெகுசன ஊடகங்களின் பொறுப்பாகும்.

'சிறுவர்களின் உழைப்பை ஏற்றுக் கொள்வதென்பது தர்ம நியாயத்துக்கு ஏற்றதோ. நல்ல சமூகக்கோட்பாடோ அல்ல. அது தர்மத்துக்கு விரோதமானது. பெருந் தீமையை வரவேற்கிறதாகிறது. இது நல்ல சமூகக் கொள்கையன்று ஏனென்றால், மனித இனத்தின் அடிப்படையான நோக்கத்தை அதாவது, சிறுவரைப் பேணிவளர்க்கும் பணியை அது புறக்கணிக்கிறது. அது மட்டுமன்றி, பிஞ்சிலேயே கனியச் செய்வதன் மூலம் எதிர்கால மனிதவளத்தின் சிறப்பை நாசம் செய்வதாகிறது' என சர்வதேச தொழில் நிறுவனம் குறிப்பிடுகிறது.

தொழில் செய்யும் சிறுவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான தேசிய சட்டதிட்டங்கள் ஏட்டில் இருக்கின்ற போதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் சீர்கேடு காணப்படுகிறது. மேலும் சட்டத்தில் காணப்படும் சில ஓட்டைகளை அல்லது குறைபாடுகளைத் தொழில் செய்வோர் தமக்குச் சாதகமாக்கிக் கொள்கிறார்கள். இவ்வாறு பொருளாதாரச் சுரண்டல்களால் சிறுவர், சிறுமியர் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் என்பது தெளிவாகின்றது. எனவே, உலகில் காணப்படும் சிறுவர், சிறுமியரைத் துஷ்பிரயோகம் செய்யாது பாதுகாப்பது நாட்டினதும், ஒவ்வொரு பிரஜையினதும் கடமையாகும். ◆

**அ. சுதர்சினி செறின்**
**கோட்டைக்கல்லாறு**

## திருத்தந்தையின் கவலை!

உலகில் போர், ஏழ்மை, அநீதி மற்றும் பல்வேறு வகைச் சுரண்டல் முறைகளில் அப்பாவி ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் அவதியுறுவது தொடர்வதாக தன் கவலையை வெளியிட்டுள்ளார், திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர். அமெரிக்க ஐக்கிய நாட்டின் பாப்பிறை உதவி அமைப்பின் அங்கத்தினர்களை திருப்பீடத்தில் சந்தித்த திருத்தந்தை மிகு துன்பகரமான சாவதேசச் சூழல்களில் அனைத்துச் சவால்களையும் மன உறுதியுடனும், நம்பிக்கையுடனும் எதிர்கொள்வோம் என்றார். தாராள மனமுடைய மக்களின் உதவியுடன் செயல்படும் இப் பாப்பிறை உதவி அமைப்புக்கு தன் நன்றியைத் தெரிவிப்பதாகவும் கூறினார் திருத்தந்தை. உங்கள் நல் நடவடிக்கைகளைப் பார்த்து இறைவனை மற்றவர் மகிமைப்படுத்தும்படியாக உங்கள் அர்ப்பணத்தில் தொடர்ந்து உழையுங்கள் என அவர்களுக்கு ஊக்கமளித்த திருத்தந்தை இறை அருளுக்காகவும், அமைதிக்காகவும் இவ்வுலக சமுதாயம் ஏங்கி நிற்கின்றது என்பதையும் நினைவுறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குறுக்குவெட்டு ஆய்வு

# பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்

'பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்' என்னும் நூல் ஒன்று எம் பார்வைக்குக் கிடைத்தது. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'பாதுகாவலன்' பத்திரிகை ஆசிரியரான அருள் பணி ரூபன் மரியாம் பிள்ளை அடிகளார் இப்புத்தகத்தை எழுதியுள்ளார் முற்றிலும் ஒரு புதிய புதுமையான முயற்சியாகவே இவ் வெளியீடு காணப்படுகின்றது. இதுவரை இலங்கையின் புதுப்படைப்பிலக்கிய வரிசையில் பத்திரிகைத் துறையைப் பற்றிய பத்திரிகை இயலைப் பற்றிய நூல் ஒன்று வெளிவந்திருந்ததாகத் தெரியவில்லை. இலங்கையில் தமிழ்ப்புதினப் பத்திரிகையின் வளர்ச்சி என்ற நூலைக் கலாசூரி ஆர் சிவகுரு நாதன் அவர்கள் எழுதியிருந்தார்கள். இது சென்னையில் இருந்து இயங்கிய குமரன் வெளியீட்டாளர்களால் வெளியிடப்பட்டது எனினும் இது பத்திரிகையியல் பற்றிய நூல் அல்ல.

ஆனால் தமிழகத்தில் இருந்து 'இதழியல்' பற்றி பல நூல்கள் வெளிவந்திருக்கின்றன. இவற்றின் பின்புலமாக இந்திய இதழ்களே காணப்படுகின்றன. இவ்விதழ்கள் பற்றி எம்மவர்கட்கு பெரும் பரிச்சியம் இல்லை.

எனினும் அருள்பணி ரூபன் மரியாம் பிள்ளை அவர்கள் தமது ஆக்கத்தில் இலங்கை தேசியப் பத்திரிகைகள், யாழ்ப்பாணப் பத்திரிகைகள் போன்றவற்றையும் இவற்றின் சில செய்திகளையும் உதாரணங்களாகத் தந்துள்ளமையால் (மட்டக்களப்பில் தினக்கதிர் - நாட்டின் சூழ்நிலைகளால் அவருக்குக்கிடைத்திருக்க வாய்ப்பில்லை. இல்லாவிடில் அவற்றையும் சேர்த்திருப்பார் என நம்புவோம்) எம்மவருக்கு பத்திரிகையியல் பற்றி விளங்கிக் கொள்வது இலகுவானதாக இருக்கின்றது.

இவர் தனது நூலில் அத்தியாயங்களை 'இயல்' என்றே பெயரிட்டுள்ளமை போற்றுதற்குரியது. முன் இயல், ஆசிஇயல், ஆய்வுஇயல், என் இயல், என்றும் இயல் 1 இயல் 2 .... என பதின் மூன்று இயல்களையும் இந்நூல் கொண்டுள்ளது.

ஈழ நாடு பத்திரிகையில் இருபத்தைந்து ஆண்டு கால அனுபவமிக்க பத்திரிகையாளர் எஸ் பெருமாள் அவர்கள் ஆய்வு இயல், என்று ஒன்றை எழுதியுள்ளார் அவர் தனது ஆய்வு இயலின் ஓரிடத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

'இந்நூலை நான் முதலில் பகுதி பகுதியாக வாசித்த போது எனக்குத் தெரியாத ஏதாவதொரு விடயத்தை ஆசிரியர் விட்டுவைத்திருக்கிறாரா என்பதிலேயே என் கண்கள் ஆவலாயிருந்தன. அப்படி விட்டு வைத்திருந்தால் அதைப் பற்றி ஏதாகிலும் எழுதி எனது மேதா விலாசத்தை வெளிப் படுத்திக் கொள்ளலாம் அல்லவா? ஆனால் எனக்குத் தெரிந்த சிலவற்றை மட்டும் அல்ல, எனக்குத் தெரியாத பலவற்றையும் பெரும் பாலும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

இவ்வரிகளே போதுமானது இந்நூலின் தன்மையை வெட்ட வெளிச்சமாக்குவதற்கு

ஒவ்வொரு இயலிலும் தாம் சொல்ல வந்த விடயங்களைத் தனித்துவமான முறையில் சிறப்பான உதாரணங்களுடன் ஆசிரியர் விளக்குகின்றார். அதற்காக அவர் படங்கள், படிநிலையமைப்புப் படங்கள் என்பனவற்றையும் பயன்படுத்தியுள்ளார். இயல் 3 றின் கடைசிப் பக்கத்தில் 'செய்தித்தாள் நிர்வாக அமைப்பு' என்ற தலைப்பில் படிநிலையமைப்பு வரைப்படம் ஒன்று தரப்பட்டுள்ளது. இது பத்திரிகையின் ஆசிரியர் பகுதி, இயந்திரப்பகுதி, நிர்வாகப் பகுதி, விற்பனைப்பகுதி, என்பவற்றையும் அவற்றில் பணிபுரிவோரின் வகைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கட்கிடையேயான தொடர் புகளையும் செவ்வனே வெளிப்படுத்துகின்றன. அவற்றிற்கு அடியில் அடிக்குறிப்பாக 'பத்திரிகையை நடத்துவது யானையைக்கட்டி தீனி போடுவது'போன்றது என்ற வசனம் காணப்படுகிறது. இது பத்திரிகை நடத்துவதின் கடினத்தை எடுத்து இயம்புகின்றது.

இடையிடையே பெட்டிக்குறிப்புகளாக பழைய பத்திரிகைகளின் சில 'போட்டோ' பிரதிகள் போன்ற அமைப்புகள் காணப்படுகின்றன. உதாரணமாக 04.02.1841ம் ஆண்டு வெளிவந்த 'உதயதாரகை' பத்திரிகையின் 3வது இதழை 38ம் பக்கம் வெளியிட்டுள்ளார்கள். அவற்றின் எழுத்துக்கள் தெளிவாகத் தெரிய கூடியவாறு சற்றுப் பெரிதாகக் காணப்பட்டிருப்பின் நன்றாக இருந்திருக்கும். எனினும் 23ம் பக்கம் (கடைசிப்பக்கம்) 08.01.2000 திகதி பாதுகாவலன் பத்திரிகையின் முன்பக்கப்படம் ஓரளவு தெளிவாகக் காணப்படுகிறது.




ஆசிரியர் தனது அத்தியாயங்களின் தலைப்புகளிலேயே தான் சொல்ல வந்த கருத்துக்களைக்கூறி தாம் ஒரு சிறப்பான பத்திரிகையாளர் என்று காட்டுகின்றார்.

பயிற்சியும் அனுபவமும் பத்திரிகையாளருக்கு அவசியம். சுடச்சுட செய்திகளைச் சேகரித்து வழங்குதல் பத்திரிகையியலுக்கு அவசியம். செய்திகளை தலைகீழ்பிரமிட் முறையில் அமைப்பது அவசியம். செய்தித் தலைப்புகளின் அவசியம் படங்களின் அவசியம், ஒப்புநோக்கற்பணி, எடிட்டோரியல், மும்முனை நேர்காணல், நிருபர்களின் பணி, பத்திரிகையியல் கலைச்சொற்கள் என்பன பற்றி நூலாசிரியர் அழகாகவும் அதே வேளை எளிமையாகவும் விளக்குகின்றார்.

பத்தாயிரம் சொற்கள் சொல்வதை ஒரு புகைப்படம் சொல்லிவிடும்' சீனப்பழமொழி இதனை ஆசிரியர் அருள் பணி ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள் நிரூபித்து விட்டார். ஆம்! அவரின் அட்டைப்படமே பெரும் வரலாற்றுச் சோகக் கறையை கதை கதையாய்க் கூறிக் கிடக்கின்றது. எரிந்து சிதைந்த யாழ் நூலகம், அதன் பின்னால் பழுதான நிலையில் யாழ் தொலைதொடர்புக் கோபுரம், வடக்குகிழக்கு தமிழர் தாயகத்தின் சீரழிவை சிறப்பாக விளக்குகின்றது அட்டைப்படம்.

ஆசிரியர் தலையங்கம் பற்றி நூலாசிரியர் குறிப்பிடுகையில் Editorial என்பதை ஏடுஇட்டோர்இயல்என்று குறிப்பிடவிழைகின்றார். ஆங்கிலத்தில் 'எடிற்றோறியல்' என்றவார்த்தைக்கும் தமிழில் 'ஏடு இட்டோர்' இயல் என்றவார்த்தைக்கும் பொருத்தப்பாடு உண்டென்று அவர் வாதிடுகின்றார்.

ஒவ்வொரு இயலும் சிறு தலைப்புகளாகப் பிரிக்கப்பட்டு, பின்னர் அவையும் உபதலைப்புகளாகப் பிரிக்கப் பட்டுள்ளமையால் வாசிப்போருக்குத் தெளிவான விளக்கம் கிடைக்க வாய்ப்பாகின்றது.

உதாரணமாக பின்வருவதைப் பார்ப்போம். செய்திகளைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

1. கால அடிப்படையில் - A விரைவுச் செய்தி
   B விரைவு அல்லாத செய்தி
2. வாசகரின் அடிப்டையில் A. எதிர் பார்க்கைச் செய்தி
   B எதிர்பராச் செய்தி
3. முக்கியத்துவத்தின் அடிப்படையில்
   A. உறுதிச் செய்தி
   B உறுதியற்ற செய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைப் பார்க்கும் போது தெளிவான படம் ஒன்று மனதில் விழுகின்றது.

நல்ல நிருபர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய குணாதிசயங்களைப்பற்றி நூலாசிரியர் குறிப்பிடுகின்றார். கல்வியறிவு, நல்நடத்தை, செய்திமோப்பத்திறன், சரியாகச் செய்திதரல், வேகம், நடுநிலைமை, அணுகுமுறை, தனித்தன்மை, தெளிவாகக் கூறும் ஆற்றல் என்பனவே அவை எனக் கூறுகின்றார்.

நூலாசிரியர் ஆங்கிலப்பதங்கட்கு பொருத்தமான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த முயற்சி செய்திருக்கின்றார். இந்நூல் பத்திரிகையியல் தொடர்பான கற்கைகட்கு 'ஓர் அறிமுகநூலாகப்' பயன்படுத்தப்படுமிடத்து அத்தமிழ்ச்சொற்கள் 'இலங்கைக் கலைச் சொல் அகராதிக்கு உரிய சொற்களாக இருக்கின்றனவா என வாய்ப்புப் பார்த்தல் அவசியம். இது தொட்பான நூலாசிரியரின் பணி மிகவும் பெரிதாகவும், கடினமானது மாகவும் இருக்கும்.

நூலாசிரியரின் கருத்துப்படி இந்நூலின் தொடர்ச்சியாக இன்னுமொரு நூலை வெளியிடும் எண்ணம் அவருக்குண்டு.

அவர் வெளியீட்டில், இலங்கையில் அமுலில் உள்ள வெளியீடுகள் தொடர்பான சட்டவிதிகள், அவை தொடர்பான தண்டனைகள் பற்றிக் குறிப்பிட்டால் மிகவும் பயன்மிக்கதாக இருக்கும்.

யுத்த சூழ்நிலையிலும் சிறப்பான அச்சடிப்பு, பெரிய எழுத்துக்கள், கணிணியின் பாவிப்பு என்பனவற்றால் நூலின் வடிவம் சிறப்பாகக் காணப்படுகின்றது.

ஆசிரியர் அருள்பணி ரூபன் மரியாம்பிள்ளை அவர்கள் தன்முயற்சியில் வெற்றி பெற்றுள்ளார் என்பது உண்மை வாழ்த்துக்கள்! ◆

**ஆழியோன்**

## பத்திரிகையாளர்களுக்கு அழைப்பு,

புதிய பார்வையுடன் முழு மூச்சாய் உழைப்பதற்கு வாருங்கள் அதற்கான திட்டங்களையும் செயல்பாட்டு முறைகளையும் சொல்லுங்கள் என்று UCIP எனப்படும் பத்திரிகைகளுக்கான அனைத்துலக கத்தோலிக்க அமைப்பின் நிர்வாகிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்தார், சமூகத் தொடர்புப் பேராயத்தின் தலைவர் பேராயர் ஜான் கூறே. மேலும் சுதந்திரமாக நமது எண்ணங்களை வெளிப்பட்டுத்த, செய்திகளைச் சொல்ல உரிமை, எழுத்தாளர்கள் தங்கள் பணிகளைச் செய்ய ஒத்துழைப்பு, எழுத்தாளர்களுக்கான பயிற்சி, சிறப்பாக ஒழுக்கவியல் சம்மந்தமான செயல்களில் பயிற்சி அளிப்பதோடு அவைகள் அறநெறி சார்ந்த கடமையும் உரிமையுமாகும் என்று கூறிய பேராயர் இவைகளைப் பற்றி கடந்த செப்டம்பர் பொது அமர்வில் பேசித் தீர்மானித்ததாகவும் தற்போது இவைகள் செயல்பாட்டுக்குக் கொண்டுவர செயல்திட்டங்கள் வகுக்கும்படியும் கேட்டுக் கொண்டார் பேராயர். UCIP நிர்வாகிகளின் கூட்டம் பிறேசில் நாட்டில் ஏப்ரல் மாதம் 15ம் திகதி முதல் 21ம் திகதி வரை நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## முதியோர்கள் நிலை

உலகம் முழுவதும் முதியோர்கள் உரிமைகள் மீறப்படுவதாகவும் அவர்கள் கவனிப்பாரின்றி விடப்படுவதாகவும் அறிக்கை ஒன்று கூறுகின்றது. 32 நாடுகளில் முதியோரின் நிலை குறித்து ஆய்வு ஒன்றை நடத்திய சர்வதேச அமைப்பு முதியோர்களின் நல ஆதரவு, கல்வி மற்றும் பயிற்சி அரசாலும் மற்றவர்களாலும் மறுக்கப்பட்டு அவர்கள் ஒதுக்கப்பட்டவர்கள் போல் நடத்தப் படுவதாகத் தெரிவிக்கின்றது. முதியோர் பாகுபாட்டுடன் நடத்தப்படுவதாகக் கூறப்படும் அவ்வறிக்கை ஏழை நாடுகளில் இவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் வாடுவதாகவும் கவலையை வெளியிடுகின்றது. 2050ம் ஆண்டில் உலகில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களின் எண்ணிக்கை 200 கோடியை எட்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப்போட்டி !

**பிள்ளைகளுக்கு மட்டும்**

**முடிவுத்திகதி 30. 05.2002**

**விவிலியம் கற்போம் - 17**

## யோசேப்பின் சகோதரர்கள் கானான் மீளல்

(தொடக்கநூல் 45: 4-27)

**பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து இடைவெளிகளை நிரப்புக**

யோசேப்பு, திகிலடைந்து நின்ற தன் சகோதரர்களை நோக்கி, 'என் அருகில் வாருங்கள், நீங்கள் எகிப்துக்குச் செல்லுமாறு விற்ற உங்கள் சகோதரனாகிய ............... நான்தான்! அதற்காக நீங்கள் மனம் கலங்க வேண்டாம். ஏனெனில், உயிர்களைக் காக்கும் பொருட்டே ..................... உங்களுக்கு முன்னே என்னை எகிப்துக்கு அனுப்பியருளினார். நீங்கள் தந்தையிடம் ................. சென்று என்னிடம் அழைத்து வாருங்கள். நீங்களும் உங்கள் பிள்ளைகளும் உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளும் உங்கள் ஆடு மாடுகளோடும் .................... பகுதியில் எனக்கு அருகில் குடியேறி வாழலாம்' என்றார். பின் யோசேப்பு தம் சகோதரர் யாவரையும் ............ அழுதார். இந்தச் செய்தி .................. அரண்மனையை எட்டவே, பார்வோனும் அவன் ...................... அகமகிழ்ந்தனர். அப்பொழுது பார்வோன் யோசேப்பை நோக்கி 'உங்கள் ............. குடும்பங்களையும் அழைத்துக்கொண்டு என்னிடம் வாருங்கள்! நான் உங்களுக்கு ............. நாட்டின் சிறந்த பகுதியைத் தருவேன், வண்டிகளைக் கொண்டு போங்கள். உங்கள் தந்தையை அழைத்துக்கொண்டு வந்து சேருங்கள்' என்றார். அத்தோடு பலவிதமான பரிசுப் பொருட்களும் அனுப்பபட்டன. அவ்வாறு சகோதரர்கள் புறப்பட்டு தந்தை யாக்கோப்பிடம் வந்து, 'யோசேப்பு இன்னும் உயிரோடிருக்கிறார், அவரே எகிப்து நாடு முழுவதற்கும்................ 'என்று அறிவித்தனர். அதைக் கேட்ட யாக்கோப்பு மன அதிர்ச்சியுற்று, அவர்கள் சொன்னதை நம்பவில்லை. ஆனால் யோசேப்பு அவரை அழைத்துவர அனுப்பி யிருந்த வண்டிகளைக் கண்டு புத்தயிர் பெற்றார்.

**விடைகள் :-** கோசேன், ஆளுநன், யோசேப்பு, முத்தமிட்டு, விரைந்து, எகிப்து, கடவுள், தந்தையையும், அலுவலர்களும், பார்வோனின்

பெயர் ..........................................................

முகவரி ......................................................

(விடைகள் வினாப்படிவத்திலேயே எழுதி அனுப்பப்பட வேண்டும். தனியாக எழுதப்படும் விடைகள் போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு மட்டும்
முடிவுத்திகதி 30. 05. 2002

# பரிசுப்போட்டி

## அறிவை வளர்ப்போம் - 17

(பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து அடிக்கோடிடுக)

1. பண்டைத் தமிழர்களால் 'முல்லைப்பண்' என்று அழைக்கப்பட்ட இராகம்
   (சங்கராபரணம், மோகனம், காம்போதி)

2) 'பத்தினித் தெய்யோ' என்று சிங்கள மக்களால் வணங்கப்படும் தமிழ்க் காப்பிய நாயகி
   (திரௌபதை, தமயந்தி, கண்ணகி)

3) இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைசாத்தானபோது இங்கையின் ஜனாதிபதியாக இருந்தவர்
   ( பிரேமதாச, J.R ஜெயவர்த்தன, சந்திரிக்கா பண்டாரநாயக்கா)

4) இலங்கையில் மிக உயர்ந்த மலை
   (சிவனொளிபாத மலை, பேதுருதாலகால மலை, இமயமலை)

5) பாக்கிஸ்தான் கிரிக்கெட் அணியின் தற்போதைய தலைவர்
   (வாசிம் அக்ரம், வக்கா யூனிஸ், இம்ரான்கான்)

6) இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தொலைக்காட்சி சேவை
   (ரூபவாஹினி, I.T.N, சக்தி)

அனுப்பவேண்டிய முகவரி
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் - 17
தொண்டன்
த.பெ. எண் - 44
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியம் கற்போம் 15 விடைகள்

மேற்பார்வையாளனை, பகலுணவை, காணிக்கைகளை,

நலம். இளைய. உள்ளறைக்குள், கோணிப், வைத்து

# அறிவை வளர்ப்போம் 15 விடைகள்

1) 1945 2) முத்தையா முரளிதரன் 3) A. அமிர்தலிங்கம் 4) அகத்தியர்

5) கல்லீரல் 6) நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

**இரண்டு போட்டிகளுக்கும் சரியான விடை அளித்து ரூபா 100/- பரிசு பெறுவோர்**

பிரதீபா வாஸ்
இல 9 சித்திவிநாயகர் வீதி
அமிர்தகழி, மட்டக்களப்பு

அ. ஷிரோமி லக்சாந்தி
'இனிக்கோ'
புதுமுகத்துவார வீதி
கல்லடி, மட்டக்களப்பு

**ஒரு போட்டிக்கு மட்டும் சரியான விடை அளித்து ரூபா 50/- பரிசு பெறுவோர்**

*கிஷோன் குணசேகரம்*
*மே.பா* S. *நாகராஜா*
கோவில் வீதி, பாலையூற்று
திருகோணமலை

E. *றொஷான்*
51 கந்தசாமி கோயில் வீதி
திருகோணமலை

**பாராட்டுப் பெறுவோர்**

*மெருஷன் கென்றிக்*
புனித யோசப் இளங்குருமடம்
விமான நிலைய வீதி
மட்டக்களப்பு

*வினோத் அன்றூ*
50 மத்திய வீதி
உவர் மலை
திருகோணமலை

**பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றி**
ஆ-ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் கலந்து வரும்

## இலங்கை வானொலியில் கத்தோலிக்க
## தமிழ் நிகழ்ச்சிகள்
## மே - ஜூன் 2002

நாள் : 12
நேரம் : மாலை 7.45 மணி
புதிய உலகம்
செய்தி
குறு நாடகம்
அறிவுச்சுரங்கம்

நாள் : 14
நேரம் : மாலை 7.45 மணி
சிறுவர் உலகம்
திருமறைக் கதைகள்
வினா விடைப் போட்டி

நாள் : 18, 19, 20, 21, 22, 23, 24
நேரம் : காலை 5.50 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை

நாள் : 26
நேரம் : மாலை 7.00 மணி
புதிய உலகம்
சிந்தனை உரை
சிறுகதை

நாள் : 28
நேரம் : மாலை 7.45 மணி
சிறுவர் உலகம்
பல்சுவை நிகழ்ச்சி

நாள் : 1, 2, 3, 4
நேரம் : காலை 5.50 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை
வழங்குபவர் : M. செல்வராணி

நாள் : 5,6,7
நேரம் : காலை 5.50 மணி
கத்தோலிக்க நற்சிந்தனை
வழங்குபவர் : தேன்மொழி டொமினிக்

நாள் : 9
நேரம் : மாலை 7.00 மணி
புதிய உலகம்
பல்சுவை நிகழ்ச்சி

நாள் : 11
நேரம் : மாலை 7.45 மணி
சிறுவர் உலகம்
திருமறைக் கதைகள்
வினாவிடைப்போட்டி

தொகுப்பு - மலர்வேந்தன்

தொடர்பு - த.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

St. Ignatius Type Setting - 28, Sinnalebe Street, Batticaloa
Printing & Cover Desiging - St. Joseph's Catholic Press, Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org